# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண். 31

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2011–2012

ஆர்.பி. உதயகுமார்
தகவல் தொழில்நுட்பவியல் துறை
அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2011

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2011–2012

## மானியக் கோரிக்கை எண்.31

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I | குறிக்கோள் | 1 |
| | முன்னுரை | 2–7 |
| II | தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) | 8–10 |
| III | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை | 11 |
| | மின்ஆளுமை திட்டங்கள் | 11–15 |
| | பொது சேவை மையங்கள் | 15–16 |
| | திறன் கட்டமைப்பு | 16 |
| | மாநில மின் ஆளுமை குழு | 16–18 |
| | தேசிய தகவல் மையம் | 18–19 |
| IV | தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு | 20–21 |
| | இணைப்பு | 22–23 |

| | | |
|---|---|---|
| | தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு | **23–24** |
| | வழித்தட உரிமை கொள்கை | **24** |
| | தரவு ஏற்றுதல் | **25** |
| **V** | **கொள்கைகள்** | **26–27** |
| **VI** | **மின் ஆளுமை முயற்சிகளில் பிற துறைகளுக்கு தகவல் தொழில்நுட்பவியல் துறை அளித்து வரும் சேவைகள்** | |
| | வன்பொருள் கொள்முதல் | **28** |
| | மென்பொருள் உருவாக்கம் | **29** |
| | துறைவாரியான மின் ஆளுமை முயற்சிகள் | **29–60** |
| **VII** | **மின் ஆளுமையின் முக்கிய பகுதிகள்** | |
| | மேகக் கணினி பயன்பாடு | **61** |
| | இணைய நெறிமுறை பதிப்பு–6 | **62** |
| | வணிக நுண்ணறிவு மென்பொருள் வாயிலாக தரவு கிடங்கு சேமிப்பு மற்றும் தரவு அகழ்வு | **63–64** |
| | செல்லிடபேசி ஆளுமை | **64–65** |
| | ஒருங்கிணைந்த நிதிநிலை மேலாண்மை | **65–66** |
| | புவிசார் தகவல் அமைப்பு | **66–67** |

| | | |
|---|---|---|
| | சொத்து மேலாண்மை அமைப்பு | **68** |
| | வசதி மேலாண்மை அமைப்பு | **68–69** |
| | தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்தும் திட்டம் | **69** |
| | அரசின் தொழில்நுட்ப மன்றம் | **70** |
| **VIII** | **மின்னணு பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம்** | **71–73** |
| **IX** | **தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலப் பூங்காக்கள்** | **74–92** |
| **X** | **தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம்** | **93–94** |
| **XI** | **தமிழ் இணையக் கல்விக் கழகம்** | **95–100** |
| **XII** | **அரசு கேபிள் டி.வி. நிறுவனம்** | **101–103** |
| **XIII** | **2011–2012 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்** | **104–106** |

அத்தியாயம் I

# குறிக்கோள்

## தகவல் தொழில்நுட்பவியல் துறை,

1. மிக விரைவாக குடிமக்களுக்கு அரசின் தகவல்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றை இணையம் வாயிலாக அவர்கள் இருப்பிடத்திலேயே வழங்குவதற்கும்,
2. கிராமம் மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புவதற்கும்,
3. தமிழ்நாட்டை, தகவல் தொழில்நுட்பத்திலான மின் ஆளுமையில் சிறந்த மாநிலமாக மாற்றுவதற்கும்,
4. தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை கணிசமான அளவுக்கு உயர்த்துவதற்கும்,
5. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கம்பிவட தொலைக்காட்சி சேவைகளை விரைவாக நியாயமான விலையில் வழங்குவதற்கும்,



6. கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுவதற்கும்,
7. குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்துவதற்கும் பாடுபடும்.

# முன்னுரை

தகவல் தொழில்நுட்பத் தொழில் முதலீட்டிற்கு இன்றியமையாத தேவைகளான அறிவியல் மற்றும் சமூகக் கட்டமைப்பையும், மனித ஆற்றலையும் தமிழகம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதை முழுமையாகப் பயன்படுத்தி தகவல் தொழில்நுட்பத் தொழிலை வளர்ச்சி அடையச் செய்யவும், மக்களுக்கு அரசின் முழு பயன்களையும் பெற்றுத்தந்திடும் வகையில் தகவல் தொழில்நுட்பத்தை ஒரு முக்கிய கருவியாக பயன்படுத்திடவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல்மிக்க சீரிய தலைமையின்கீழ் இந்தியாவிலேயே, தமிழகத்தை தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒப்புயர்வற்ற முதன்மை மாநிலமாக உருவாக்கிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

தகவல் தொலைத் தொடர்பு சார்ந்த தேசிய மின் ஆளுமைத் திட்டங்கள் மற்றும் மாநில அரசின் பல்வேறு மின் ஆளுமை திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில், மற்ற மாநிலங்களுக்கு தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது. சாமானிய மக்களின் அடிப்படைத் தேவைகளை உணர்ந்துள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அனைத்து அரசு சேவைகளும் அவர்களது இருப்பிடத்திற்கு அருகாமையிலேயே திறம்படவும், வெளிப்படையாகவும், நம்பகத்தன்மையுடனும் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று உறுதி பூண்டுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலை நோக்கு பார்வை, தற்போதுள்ள அரசு நடைமுறைகளை மாற்றி உலக தரத்தில் தனியார் துறையினரின் சிறந்த நடைமுறைகளை கடைப்பிடிக்க உதவும். தற்போது அரசு அலுவலகங்களில் கணினிகள் தட்டச்சு செய்வதற்கும், மின் அஞ்சல் அனுப்புவதற்கும் பயன்படுத்தப்படும் நிலையில், பல துறைகள் இணையவழி சேவைகளை வழங்க தொடங்கியுள்ள நிலையில், அதிநவீனமயமான ஆளுமை இன்னும் எட்டப்படவில்லை. மின் ஆளுமை, குடிமக்கள், வணிகம் மற்றும் அலுவலர்களுக்கு வழங்கும் சேவைகளை மேம்படுத்தி வழங்குவது மட்டுமல்லாமல், அரசின் செயல்முறையை மறுவடிவமைத்து, திறம்படவும்,



வெளிப்படையான முறையில் அரசு நிறுவனங்கள் செயல்படவும் வழிவகை செய்யும். இதன்மூலம் நமது சமுதாயம் ஒரு தன்னிறைவு பெற்ற சமுதாயமாகத் திகழும். தற்போது, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்திறம் மிகுந்த சீரிய தலைமையின் கீழ் செயல்பட்டுவரும் தமிழக அரசு, தகவல் தொலைத்தொடர்புத் தொழில்நுட்ப கருவிகளின் உதவியுடன், ஒளிவு மறைவற்ற, திறன் மிகுந்த வேகமான ஆளுமையை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

தொழில்நுட்பத்தைப் புகுத்தி உலகத் தரத்திலான வசதிகளை, அரசு அலுவலகங்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பதன் மூலம், மக்களுக்கான தமது பணி மற்றும் செய்யும் சேவைகள் குறித்த மன நிலையில் நல்ல மாற்றத்தைக் கொண்டு வரலாம். ஆகவே, தகவல் தொழில்நுட்பவியல் துறை, அரசுத் துறைகளில் மின் ஆளுமையின் நோக்கங்களைச் செயல்படுத்துவதில் உறுதுணையாக இருந்து வருகிறது.

ஒரு குடிமகன், அரசு அலுவலகத்திற்குச் சென்று, தனது குறைகளை முறையிட்டுத் தீர்வு கண்டு வர பயணச் செலவுக்காகக் குறிப்பிடத்தக்க அளவில் பணத்தையும் நேரத்தையும் செலவிட வேண்டியுள்ளது. மேலும் ஊதிய இழப்பு மற்றும் இதர செலவுகளும் இதில் அடங்கும்.

அரசியல் அமைப்பில், அரசுக்கு அளிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டுமானால் இந்த நிலையை நாம் அடியோடு மாற்ற வேண்டும். ஒவ்வொரு குடிமகனும், அரசு அலுவலகங்களுக்கு போகாமலேயே, இணையத் தொடர்பின் வாயிலாகவே, அரசு சேவைகளைப் பெறச் செய்வதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முக்கிய குறிக்கோளாகும். வழக்கமான அரசு சேவைகளைப் பெற இணையதளம் மக்களுக்கும் அரசுக்கும் இடையே தொடர்பு கொள்ளும் ஒரு முக்கிய வழியாக இருக்க வேண்டும். **இந்த மாற்றத்திற்கான மந்திரச் சொல் – "அரசு அலுவலகங்களுக்கு மக்கள் அலைவதைக் குறைப்போம். மக்களுடன் அரசின் தொடர்பை வளர்ப்போம்".**

மேற்கண்ட செயல்திட்டத்தை வடிவமைத்து, அரசு மின் ஆளுமை கொள்கையை விரைவில் வெளியிட உள்ளது.

தகவல் தொழில்நுட்பம், தகவல் தொடர்புத் துறைகளில் முதலீடு மற்றும் உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடத்தைப் பெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த ஏற்றுமதியை கணிசமான அளவில் உயர்த்துவதே மாண்புமிகு முதலமைச்சர்



அவர்களின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறையில், ஏறத்தாழ 700 நிறுவனங்களில் 2,00,000 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இது 2011–2012 ஆம் ஆண்டில் மேலும் 30 விழுக்காடு உயரக்கூடும். 40,000 புதிய மாணவர்களுக்கு வேலை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழில் துறைகளில் ஏறத்தாழ 1,50,000 பேர் பணியாற்றுகின்றனர். 2011–2012 ஆம் ஆண்டில் மேலும் 60,000 பேர்களுக்கு, தகவல் தொழில் நுட்பவியல் சார்ந்த துறைகளில் வேலை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்ப சேவைகளின் மூலம் 2011–2012ஆம் ஆண்டு ரூ.25,000 கோடி ஏற்றுமதி வருவாய் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் ஏறத்தாழ 1,000 நிறுவனங்கள் உள்ளன.

தமிழ்நாட்டினை, தகவல் தொழில் நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களில் உலக அளவில் விரும்பித் தேர்ந்தெடுக்கும் இடமாக மிகவிரைவாக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.

உயிரிழந்து, செயலற்றுக் கிடந்த அரசு கேபிள் நிறுவனத்திற்கு புத்துயிரூட்டி, அனைத்து மக்களுக்கும் நியாயமான கட்டணத்தில், கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகளை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகின்றார்கள்.



**அத்தியாயம் II**

## தமிழ்நாடு மின்னணு நிறுவனம்
## (ELECTRONICS CORPORATION OF TAMIL NADU)

தமிழக அரசுக்கு முழுவதும் சொந்தமான தமிழ்நாடு மின்னணு நிறுவனம் **(ELCOT)** இந்திய நிறுவனங்கள் சட்டம் **1956**–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாகும்.

தகவல் தொழில்நுட்பப் புரட்சி இந்தியாவில் வேரூன்றிய சமயத்தில் மின்னணுத் தொழிலை மேம்படுத்திடும் நோக்கத்தோடு துவக்கப்பட்ட ''தமிழ்நாடு மின்னணு நிறுவனம்'' தன்னை தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பத்தின் முக்கிய அங்கமாக மாற்றிக்கொண்டுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசோடு இணைந்து, அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு வாரியங்கள் போன்றவற்றிற்கு தகவல் தொழில்நுட்பம், மின் ஆளுமை, இணையதள இணைப்பு மற்றும் திறன் கட்டமைப்பு ஆகிய பிரிவுகளில் சேவையாற்றி வருகிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் வன்பொருள் கொள்முதல், மென்பொருள் உருவாக்கம் மற்றும் இந்திய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் திட்டமான பெரும்பரப்பு வலையமைப்பு **(TNSWAN)** முதலியவற்றை

செயல்படுத்திட உகந்த ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது. தற்போது இந்திய அரசின் மற்றுமொரு திட்டமான மாநில தரவு மையத்தை **(State Data Centre)** செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவிற்கு மட்டுமல்லாமல், உலகத்திற்கே வழி காட்டுகின்ற வகையில் உலகத்திலேயே முதன்முறையாக, அரசு மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பல்வகை தொழில்நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் சேர்ந்துள்ள மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கிடும் திட்டத்தினை அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் செயல்திறன் மற்றும் அனுபவம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த வரலாற்று சிறப்புமிக்க திட்டத்திற்கான மடிக்கணினி கொள்முதல் பணியினை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளார்கள்.



## கணினிப் பயிற்சி மையம் (லினக்ஸ் மற்றும் பயன்பாட்டு மென்பொருள்) (Linux and Application Software)

300 நபர்கள் அமரும் இடவசதியுடன் சென்னையிலும், 25 நபர்கள் அமரும் இடவசதியுடன் மாவட்ட அளவிலும் கணினி பயிற்சி மையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதன்மூலம், இதுவரை கிட்டத்தட்ட 18,000 அரசு ஊழியர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

அத்தியாயம் III

# தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, இந்திய அரசின் மின் ஆளுமை முயற்சிகளை முனைப்புடன் செயல்படுத்தும் மாநிலத்தின் ஒருங்கிணைந்த முகமையாக செயல்படுகிறது. மேலும், இது தமிழக அரசின் அனைத்து மின்ஆளுமை திட்டங்களைச் செயல்படுத்தும் ஆதரவு முகமையாகவும், திறன் கட்டமைப்பை உருவாக்கி, திட்டங்களை திட்ட மேலாண்மை மூலம் செயல்படுத்தவும் உதவுகிறது.

## <u>மின் ஆளுமை திட்டங்கள்</u>

### முன்னோடி மின் மாவட்டம்

தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் அதன் பெரும்பாலான சேவைகள் மாவட்டங்கள் மூலம் மக்களைச் சென்றடைகிறது. அதனால், அரசின் சேவைகள் அடிமட்டம் வரை சிறப்பாக செயல்படுவதற்கு மின் ஆளுமை திட்டம் பெரும்பங்கு வகிக்கிறது. மக்களுக்கு சேவைகள் செய்வதற்காக வருவாய்த்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,



பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சமூக நலத்துறை போன்ற துறைகளை ஒன்றாக இணைத்து, தமிழக அரசின் நிர்வாகத்தினை கணினிமயமாக்குவதில் மின்னணு மாவட்டத் திட்டம் பெரும்பங்கு வகிக்கின்றது. இத்திட்டத்தின் மூலம் மாவட்ட நிர்வாகத்தின் பணிப்போக்கு தானியக்க முறையில் உருவாக்கப்படுவதால் துறைகளின் சேவைகள் செம்மையாக வழங்கப்படும். இது மாநிலத்தின் மிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாகும்.

இத்திட்டம் முதற்கட்டமாக அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருவாரூர் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது நீலகிரி மாவட்டமும் முன்னோடி மின் மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், அனைத்து கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் / வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு, தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பின் மூலமாக **(TNSWAN)** மாநிலத் தரவு மையத்துடன் **(State Data Centre)** இணைக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியவர்களின் அலுவலகங்களுக்குத் தேவையான வன்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. வருவாய் ஆய்வாளர்

மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகிய அலுவலர்களுக்குத் தேவையான வன்பொருட்கள் வழங்கப்படவுள்ளன. பல்வேறு துறை சார்ந்த அரசு சேவைகளைத் துரிதமாகவும், இணையதளம் வாயிலாகவும் மற்றும் பொதுச் சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்கத் தேவையான சிறப்பு மென்பொருளும் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

### (1) பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைக்கான மின் மாவட்ட மென்பொருள்

முன்னோடி மின் மாவட்டங்களிலுள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பள்ளி மேற்படிப்பிற்கு கல்வி உதவித்தொகை, முதற்கட்டமாக இணையவழியாக வழங்கப்படுகிறது. மாணவர்கள் தங்களது அடையாள அட்டையைப் பயன்படுத்தி தங்களது விண்ணப்பம் குறித்த நிலையினை பொதுச் சேவை மையங்கள் மூலம் சரிபார்த்துக் கொள்ள முடியும். இந்த வெளிப்படையான அணுகுமுறை உதவித் தொகைக்கென பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, வழங்கப்பட்டவை,



நிலுவையிலுள்ளவை மற்றும் மாணவர்களின் குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றைத் தீர்க்கவும் அந்தத் துறைக்கு உதவுகிறது.

### (2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான மின் மாவட்ட மென்பொருள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக பள்ளி மேற்படிப்பு உதவித்தொகை திட்டம் துவக்கப்பட்டிருக்கிறது.

### (3) சமூகநலத் துறைக்கான மின்மாவட்ட மென்பொருள் பின்வரும் திட்டங்களை உள்ளடக்கியது

- ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்
- விதவை மறுமண நிதியுதவித் திட்டம்
- ஏழை விதவை மகளின் திருமண நிதியுதவித் திட்டம்
- ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம்
- கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்
- பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

## வருவாய்த் துறைக்கான மின் மாவட்ட மென்பொருள்

வருவாய்த் துறையின் சேவைகளை பொதுச் சேவை மையங்கள் மற்றும் இணையம் மூலமாக வழங்கும் திட்டம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் அரசு அலுவலகத்திற்கு செல்லாமலே, இணையம் வழியாக விண்ணப்பித்து, எண்ணிலக்க வடிவச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

- குடும்பத்தில் பட்டதாரிகள் இல்லை என்பதற்கான சான்றிதழ்
- ஆதரவற்ற பெண்களுக்கான சான்றிதழ்
- வருமானச் சான்றிதழ்
- வகுப்புச் சான்றிதழ்
- குடியிருப்புச் சான்றிதழ்

## பொது சேவை மையங்கள் (Common Service Centres)

பொதுமக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்த இவ்வரசு அவர்களது இருப்பிடத்திலேயே பொதுச் சேவை மையங்கள் மூலம் செம்மையாகவும், வெளிப்படையாகவும் மற்றும் நம்பகத்தன்மையுடனும், மிகக்குறைந்த செலவில் அரசின் அனைத்து சேவைகளையும் எளிதாக வழங்கிட நடவடிக்கை



எடுத்துள்ளது. தேவையான பொதுச் சேவை மையங்களை கிராமப்புறங்களில் அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளார்கள்.

## திறன் கட்டமைப்பு (Capacity Building)

அரசுத்துறைகளின் மின் ஆளுமை திட்டத்தின் வழிமுறைகளை தயாரித்தலும், மின் ஆளுமை திட்டம் குறித்த அரசு அலுவலர்களின் பயிற்சித் திறன் உருவாக்கம் ஆகியவற்றை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் நோக்கமாகும். தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள துறைகளுக்கான மின் ஆளுமை திட்ட ஊக்குவிப்பு, திட்ட மேலாண்மை மற்றும் கணினிப் பயிற்சி ஆகிய பல்வேறு பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு பிரிவின் கீழான ஆலோசகர்கள் அடங்கிய மாநில மின் ஆளுமைக் குழு **(SeMT)** ஒன்று இதற்கென தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## மாநில மின் குறிக்கோள் குழு (State e-Mission Team or SeMT)

- தேசிய மின் ஆளுமை திட்டத்தின் குறிக்கோளை அரசுத்துறைகள் செயல்படுத்த உதவிடும் பொருட்டு, "மாநில மின் ஆளுமைக் குழு" அமைக்கப்பட்டுள்ளது.

- தேசிய மின் ஆளுமை திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட துறைகளுடன் நெருக்கமாக இணைந்து செயல்பட்டு ஆலோசனை வழங்கி, தகுந்த ஒத்துழைப்பை இக்குழு வழங்குகிறது.
- துறைகள், தங்கள் சேவைகளை இணையதளம் வாயிலாகவும் பொது சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்க ''திட்ட மின் குறிக்கோள் குழு'' **(Project e-Mission Team or e-Team)** அமைக்க இக்குழு உதவும்.
- துறைகள், தங்கள் சேவைகளை இணையதளம் வாயிலாகவும் பொது சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்குவதற்கு ஏதுவான திட்ட வழிமுறைகளைத் தயாரிக்க இக்குழு உதவும்.
- துறைப் பணியாளர்கள் தங்கள் துறைச் சேவைகளை இணையதளம் வாயிலாகவும், பொது சேவை மையங்கள் வாயிலாகவும் வழங்கத் தேவையான பயிற்சி மற்றும் திறன் உருவாக்கத்தை இக்குழு வழங்கும்.
- மாநில மின் ஆளுமைக்குழு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசகர்களைக் கொண்டுள்ளது:–



  - முதன்மை ஆலோசகர்
  - முதுநிலை ஆலோசகர் (தொழில்நுட்ப மேலாண்மை)
  - முதுநிலை ஆலோசகர் (மாற்றுமுறை மேலாண்மை)
  - ஆலோசகர் (தொழில்நுட்ப மேலாண்மை)
  - ஆலோசகர் (திட்ட மேலாண்மை)
  - ஆலோசகர் (நிதி மேலாண்மை)

## தேசிய தகவல் மையம் (NIC)

தமிழ்நாட்டில் மின் ஆளுமைக்கு வித்திட்ட முன்னோடியான, தேசிய தகவல் மையத்தின் பங்கினை மாநில அரசு அங்கீகரிக்கிறது. மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் கீழ் இயங்கிவரும் ஒரு முதன்மையான அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனமான தேசிய தகவல் மையம் அரசுத் துறைகளில், தகவல் தொலைதொடர்பு குறித்த தீர்வுகளைச் செயல்படுத்துவதில் முன்னிலை வகிக்கிறது.

தேசிய தகவல் மையம், நாட்டில் மின் ஆளுமையைப் புகுத்தி கடந்த **30** ஆண்டுகளில் ஒரு வலிமையான அடித்தளத்தை உருவாக்கி சிறந்த மற்றும் மிக வெளிப்படையான ஆளுமையை

ஏற்படுத்தி கடைநிலை மக்களையும் எட்டிட எண்ணும் தமிழக அரசின் முயற்சிக்கு உதவுகிறது.

மத்திய அரசு, மாநில அரசுகள், யூனியன் பிரதேச நிர்வாகங்கள், மாநில மற்றும் அரசு நிறுவனங்களுக்குத் தகவல் தொலைதொடர்பு தொழில்நுட்பவியலைக் கொண்டு மின்ஆளுமை தொடர்பான ஒத்துழைப்பு வழங்குவதில் தேசிய தகவல் மையம் முதுகெலும்பாக திகழ்கிறது. இம்மையம், பல்வகை தகவல் தொலை தொடர்பு சேவைகளை வழங்கி வருகிறது. அவற்றுள் நிக்நெட் **(NICNET)** எனும் தேசிய அளவிலான தொலைதொடர்பு வலையமைப்பு நுழைவாயில் மூலம், **53** மத்திய அரசின் துறைகள், **35** மாநில / யூனியன் பிரதேசங்கள், தலைமைச் செயலகங்கள் மற்றும் **603** மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களுக்குத் தகவல் தொலை தொடர்புச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

நிக்நெட், பரவலாக்கப்பட்ட திட்டமிடுதல், அரசு சேவைகளில் முன்னேற்றம், தேசிய மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பரந்த வெளிப்படைத்தன்மை மற்றும் மக்களிடம் அவற்றின் பொறுப்பினை மேம்படுத்துதல் ஆகியவற்றில் முக்கியப் பங்கு வகிக்கிறது.



## அத்தியாயம் IV

# தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு

தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பானது, இணைய அகன்ற அலைவரிசைத் தடங்கள், கணினித் திறன், அகன்ற அலைவரிசையாக்கம், தரவு சேமிப்பு, கட்ட வாரியான வளப் பகிர்மானம் முதலான பலதரப்பட்ட தொழில்நுட்பங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஒத்துழைப்புக்குத் தேவையான சாதனங்கள், வசதிகள் மற்றும் வளங்களை உள்ளடக்கியுள்ளது.

தடையற்ற சேவைகளை அளிக்கும் விதத்தில் கீழ்கண்ட கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

(அ) மாநில தரவு மையம் (**State Data Centre**)

(ஆ) தமிழ்நாடு மின்னணு நிறுவன தரவு மையம்

(இ) தேசிய தகவல் மைய தரவு மையம்

(ஈ) தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு **(TNSWAN)**

### பின்தளம் (Back end)

செயலாக்கத் திட்டத்தின் பகுதியாகவும், மாநில அரசின் நிதி உதவி பெறும் திட்டத்தின் ஒரு பகுதியாகவும், ஒவ்வொரு

அரசுத் துறையும் தங்கள் துறையின் ''தற்போதைய நிலை குறித்த ஆய்வு'', அரசின் செயல்முறை மறுவடிவமைப்பு ஆய்வு மற்றும் ''செயல்படுத்தப்பட வேண்டியவை குறித்த ஆய்வு'' ஆகியவற்றை மேற்கொண்டு மென்பொருளை உருவாக்கி, குடிமக்களுக்கு சேவைகளை அவர்களது இருப்பிடத்திலேயே கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும். இத்தகைய மென்பொருள் உருவாக்கத்தில் கூடியவரை திறந்த நிலை தொழில்நுட்பத்தையே பயன்படுத்த அரசு முயலும்.

### முன்தளம் (Front end)

குடிமக்கள்/வணிக நிறுவனங்கள் தங்களுக்கான தகவல் மற்றும் பரிமாற்ற சேவைகளை வீட்டிலிருந்தும், இணைய உலா மையம், பொது சேவை மையங்கள், அலுவலகங்கள் மற்றும் இணைய தளம் வாயிலாக பெறுவதற்கு உரிய வழிவகை செய்யப்பட வேண்டும்.

குடிமக்கள் இச்சேவைகளைப் பெறுவதற்கான முகப்பு, மாநில சேவை இணையதளமாகும். **www.tn.gov.in** என்ற **மாநில சேவை இணையதளமானது மாநில சேவை விநியோக நுழைவாயில் மற்றும் மின் படிவங்களுடன் விரைவில் துவக்கப்படவுள்ளது.**



## இணைப்பு (CONNECTIVITY)

### தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) – செங்குத்து இணைப்பு (Vertical Connectivity)

**தமிழ்நாடு மின்னனு நிறுவனம் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பை ரூ.181.69 கோடி செலவில் உருவாக்கியுள்ளது.**

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பில் 708 இருப்பு முனைகள் உள்ளன. தரவு, ஒளி, ஒலி இணைப்புகளின் வாயிலாக குடிமக்களுக்கு சேவைகளை துரிதமாகவும், வெளிப்படையாகவும் வழங்க ஏதுவாக இந்த வலையமைப்பின் மூலம் அனைத்து அரசுத் துறைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN) – கிடைமட்ட இணைப்பு (Horizontal Connectivity)

அரசுத் துறைகள் தங்களது பயன்பாடுகளை அளிப்பதற்கும், ஒலி இணையம் மற்றும் ஒளி வாயிலான கலந்துரையாடல் வசதிகளை பெறுவதற்கும் ஏதுவாக தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்புடன் இருப்புமுனைகள் **(Point of Presence)** வாயிலாக இணைக்கப்படுவது அவசியமாகிறது.

வணிகவரித்துறை, குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்டம் (**TNHSP**), கருவூலக் கணக்குத்துறை, பத்திரப் பதிவுத்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, வனத்துறை, தமிழ்நாடு மின்னாளுமை முகமை, மாநில சுகாதாரக் குழுமம், வீட்டு வசதித்துறை, நில அளவைத்துறை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த 5,000 அலுவலகங்களுக்கும் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பிலிருந்து கிடைமட்ட இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

## அகன்ற அலைவரிசை இணைப்பு (Broadband Connectivity)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், வெளிப்படையான ஒப்பந்தப்புள்ளி வாயிலாக பாரத் சஞ்சார் நிகாம் **(BSNL)** நிறுவனத்தை தேர்ந்தெடுத்து, அந்நிறுவனத்தின் வாயிலாக சுமார் 7,000 அரசுத் துறை அலுவலகங்களுக்கும் பள்ளிகளுக்கும் அகன்ற அலைவரிசை இணைப்பை வழங்கியுள்ளது.

## தேசிய அறிவுத்திறன் வலையமைப்பு (National Knowledge Network)

தேசிய அறிவுத் திறன் வலையமைப்பு ஒரு அதிவேகத் திறனுடைய (10 **Gbps** மற்றும் அதன் மடங்குகளின் அளவு



வேகத்திறன் கொண்ட) ஒரு வலையமைப்பாகும். மத்திய அரசின் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ள இவ்வலையமைப்பு நாடு முழுவதிலுமுள்ள கல்வி நிறுவனங்களை இணைக்கிறது. இவ்வலையமைப்பில் உள்ள நிறுவனங்கள் **1 Gbps** மற்றும் அதற்கு மேலான வேகத்திறனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஒட்டுமொத்த வலையமைப்பும் உலகளாவிய அறிவியல் சமூகத்துடன் பன்மடங்கு வேகத்திறனுடன் தடையின்றி இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு இவ்வலையமைப்பின் அனுகூலங்களை சாதகமாக்கிக் கொண்டு, தனது மின் ஆளுமை முயற்சிகளை மேம்படுத்துவதுடன், கல்வி நிறுவனங்களை இவ்வலையமைப்புடன் இணைக்க ஊக்கமளிக்கும்.

## வழித்தட உரிமைக் கொள்கை (Right of Way Policy)

தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் தமிழகத்தின் இதர சாலைகளில் கண்ணாடி இழை வடங்கள் பதிக்க பொது மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழித்தட உரிமைக் கொள்கையின் கீழ் அனுமதி வழங்கிட நெறிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை அரசு வெளியிட்டுள்ளது.

## <u>தரவு ஏற்றுதல் (HOSTING)</u>

### மாநில தரவு மையம் (State Data Centre)

தேசிய மின் ஆளுமை திட்டத்தின் மின் ஆளுமை முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் விதத்தில், அதன் முக்கிய கட்டமைப்புகளின் ஒன்றான மாநில தரவு மையத்தினை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கியுள்ளது. இத்தரவு மையம் அரசுத் துறைகளுக்கிடையேயும் **(G2G)**, அரசிடமிருந்து மக்களுக்கும் **(G2C)** மற்றும் அரசிடமிருந்து வணிகத்திற்கும் **(G2B)** சேவைகளை சிறப்பான வகையில் வழங்க ஏதுவாக தனது சேவைகள், பயன்பாடுகள் மற்றும் கட்டமைப்புகளை ஒருங்கிணைக்கும். மாநில தரவு மையமானது, தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மற்றும் பொது சேவை மையங்கள் வாயிலாக தனது பெரும்பாலான சேவைகளை அளிக்கும்.

அரசுத் துறைகளின் அனைத்து பயன்பாடுகளும் மாநில தரவு மையம், தமிழ்நாடு மின்னணு நிறுவன தரவு மையம் மற்றும் தேசிய தகவல் மைய தரவு மையத்தில் ஏற்றப்பட்டுள்ளன. மாநில தரவு மையத்தை பிரதிபலிக்கும் வகையில் தரவு மீட்பு மையம் ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளை அரசு ஆராய்ந்து வருகிறது.



அத்தியாயம் V

# கொள்கைகள்

## மின் ஆளுமைக் கொள்கை (e-Governace Policy)

கணினிப் பயன்பாட்டினால் மட்டுமே அரசின் செயல்பாட்டுத் திறனில் முன்னேற்றத்தினைக் கொண்டு வந்துவிட முடியாது. அரசின் செயல்திறனை மேலும் உயர்த்திட உதவிடும் மின் ஆளுமையை செயல்படுத்திடும் வகையில், ஒரு வழிகாட்டி அணுகுமுறை மற்றும் தொலைநோக்குடன் கூடிய பொதுவான கொள்கை அவசியமாகிறது. மின் ஆளுமை கொள்கையானது தெரிந்த அளவுருக்களையும், தெளிவான பார்வையையும் கொண்டதாக அமைய வேண்டும். எனவே **விரைவில் ஒரு மின் ஆளுமைக் கொள்கையை அரசு செயல்படுத்தவுள்ளது.**

ஏற்கனவே மின் பாதுகாப்புக் கொள்கை நடைமுறையில் இருந்த போதிலும், அதனைச் செயல்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். அதைப் போலவே, மின் கழிவுக் கொள்கையும் செயல்படுத்தப்பட வேண்டும். மத்திய அரசின் ‘‘குடிமக்களை ஈடுபடுத்தும் நெறிமுறைகளைப்’’ பின்பற்றி,

அரசின் அனைத்து மின் ஆளுமை செயலாக்கத்திலும் மக்களை ஈடுபடுத்திட அரசு தீவிரமாக முயன்று வருகிறது.

### மின்னணு சேவைகள் அளித்தல் சட்டம் (Electronic Services Delivery Bill)

குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் மக்களுக்கு மின்னணு சேவைகளை அளித்திடும் சட்டத்தினை 2011–2012ஆம் ஆண்டிலேயே நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்வதற்கான பணிகளில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. இது குறித்த ஒரு வரைவு சட்டமுன்வடிவை மக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கென இணையத்தில் வெளியிட்டுள்ளது.



அத்தியாயம் VI

# மின் ஆளுமை முயற்சிகளில் பிற துறைகளுக்கு தகவல் தொழில்நுட்பவியல் துறை அளித்துவரும் சேவைகள்

### (அ) வன்பொருள் கொள்முதல் (Hardware Procurement)

அரசுத் துறைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான வன்பொருட்களைக் கொள்முதல் செய்திட தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தையும் ஒரு கொள்முதல் முகமையாகக் கருதிட அரசு ஆணையிட்டுள்ளது.

சந்தை விற்பனை விலையைக் காட்டிலும் 20–லிருந்து 30 சதவிகிதம் வரை குறைவான விலையில் தரம் உயர்ந்த பொருட்களை கொள்முதல் செய்திட உதவிடும் புதுமையான, திறந்த மற்றும் வெளிப்படையான மின்னணுக் கொள்முதல் கொள்கை, விற்பனையாளர்களிடம் போட்டியை ஊக்குவிக்கிறது.

## (ஆ) மென்பொருள் உருவாக்கம் (Software Development)

அரசுத் துறைகளின் மென்பொருள் தேவைக்கென அவற்றின் தேவை மற்றும் கருத்துரு உருவாக்கல், மின்னணு ஒப்பந்தப் புள்ளிகள் கோரல் மற்றும் மென்பொருள் உருவாக்குபவர்களைத் தேர்ந்தெடுத்தல் போன்ற பணிகளில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவை முனைப்புடன் உதவிகள் வழங்கி வருகின்றன. மென்பொருள் உருவாக்கல் நிலை சுழற்சி அணுகுமுறையினை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மேற்கொண்டு வருவதன் மூலம், மென்பொருள் உருவாக்கலின் அனைத்து நிலைகளும் அறியப்பட்டு, முறையாக ஆவணப்படுத்தப்படுகிறது.

## <u>துறை வாரியான மின் ஆளுமை முயற்சிகள் (Department-wise e-Governance Initiatives)</u>

### 1) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (Adi-Dravidar & Tribal Welfare Department)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் கல்வி உதவித் தொகை வழங்கிட இணையம் சார்ந்த மென்பொருள் பயன்பாட்டில் உள்ளது. இம்முறை அனைத்து



மாவட்டங்களிலும் உள்ள **3,470** கல்வி நிறுவனங்களிலும் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டு, இதன் மூலம் **2.60** இலட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

### 2) வேளாண்மைத்துறை (Agriculture Department)

### அக்ரிஸ்நெட் (AGRISNET)

விவசாயிகளுக்கு ஒற்றைச் சாளர முறையில் தகவல்கள் மற்றும் சேவைகளை வழங்கிட மென்பொருள் ஒன்று வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள், பயிர், பருவநிலை போன்ற தகவல்களை விவசாயிகளுக்கு அளிக்கும்.

**(http://www.tnagrisnet.tn.gov.in/website/index.php)**

### 3) கால்நடைப் பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை (Animal Husbandry, Dairying & Fisheries Department)

அவசர காலங்களில் மீனவர்களின் படகிற்கும் கரையில் உள்ள மையத்திற்கும் இடையே தொடர்பினை ஏற்படுத்தி, தேடுதலை விரைவுபடுத்திடவும் மற்றும் உயிர்காத்திடவும் உதவிடும் வகையில் வி.எச்.எப். கருவிகள் பொருத்தப்பட்டு,

தடையற்ற தொடர்புத் திட்டம் ஒன்று 7 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4) பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (BC, MBC & Minorities Welfare Department)

முன்னோடி மின் மாவட்டங்களில் அமைந்துள்ள மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலகங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதன் மூலம் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு பத்தாம் வகுப்புக்கு மேல் கல்வியைத் தொடர உதவித் தொகை வழங்கும் பணி முழுமையாக இணையதள வழியாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்கள் அடையாள அட்டையின் மூலம் தங்களது விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை பொது சேவை மையங்கள் வாயிலாக அறிந்து கொள்ள இயலும். இத்தகைய வெளிப்படையான அணுகுமுறையின் மூலம் இதுவரை வழங்கப்பட்டுள்ள மற்றும் நிலுவையில் உள்ள கல்வி உதவித் தொகை குறித்த விவரங்கள் மற்றும் மாணவர்களின் குறைகளை துறையினால் கண்டறிய இயலும்.



### 11ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டி (Free Cycles for Plus One Students)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் மூலம் விநியோகிக்கப்படும் இலவச மிதி வண்டிகள் வழங்கும் திட்டத்திற்கென மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் இம்மென்பொருள் மூலம் நேரடியாக தமது பள்ளிகளிலுள்ள உரிய மாணவர்களின் விவரங்களைப் பதிவு செய்ய இயலும். தேவைப்படும் எண்ணிக்கையைக் கணக்கிடவும், கொள்முதல் செய்திடவும் மற்றும் விநியோகத்தினைக் கண்காணிக்கவும் இம்மென்பொருள் வழிசெய்கிறது.

## 5) கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை (Co-operation, Food and Consumer Protection Department)

குடும்ப அட்டைகள் வழங்கிட தமிழகத்திலுள்ள இரண்டு கோடி குடும்பங்களின் தரவுகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கி, அவை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலக்கணினியில் இணையதளம் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளது. தற்போது மாவட்ட ஆட்சியர்களால் இத்தரவுகள் பல்வேறு திட்டங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## மத்தியக் கூட்டுறவு வங்கிக்கான மென்பொருள் (Central Co-operative Banking Software)

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் செயல்பாட்டினை தன்னியக்கமாக்கிட தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ஒரு வலைதள மென்பொருளை உருவாக்கியுள்ளது.

இம்மென்பொருள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளில் நிறுவப்பட்டுள்ளது.

இதுதவிர, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் முதன்மை வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாட்டினைத் தன்னியக்கமாக்கிடும் வகையில் வலைதள மென்பொருள் ஒன்றினை உருவாக்கியுள்ளது.

## கையடக்க ரசீது கருவி (Hand Held Billing Machines)

கூட்டுறவு பதிவாளர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் செயல்படும் 28,500 கூட்டுறவு சில்லரை விற்பனை நிலையங்கள் மற்றும் மண்ணெண்ணெய் நிலையங்களுக்கு கையடக்க ரசீது கருவிகளை வழங்கும் பணி தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது.



தமிழ்நாடு மின்னணு நிறுவனம் கையடக்க ரசீது கருவிகளை சென்னை மாநகரிலுள்ள 1,411 நியாய விலைக் கடைகள் மற்றும் மண்ணெண்ணெய் நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இதுவரை தமிழ்நாடு மின்னணு நிறுவனம், திருவள்ளூர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் உள்ள 1,156 நியாயவிலைக் கடைகளுக்கு இந்தக் கருவிகளை வழங்க உத்தரவு கிடைக்கப் பெற்றுள்ளது.

## கூட்டுறவு , உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையை கணினிமயமாக்குதல் ஞ(e-Services of Civil Supplies and Consumer Protection Department)

வலைதளம் மூலம் மாவட்ட வழங்கல் மற்றும் வட்ட வழங்கல் அலுவலகங்களுக்கிடையே தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம், பொதுமக்களுக்கு விரைவாக மேம்படுத்தப்பட்ட சேவைகளை வழங்குவது இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். இம்முறையின் மூலம் பல்வேறு சேவைகளை வலைதளம் வாயிலாக வழங்கலாம்.

இம்மென்பொருள், துறை மற்றும் பொதுமக்களிடையே பாலமாக செயல்படும்.

## 6) வணிக வரி மற்றும் பதிவுத்துறை (Commercial Taxes and Registration Department)

வணிகர்கள் இணையதளம் மூலம் தங்களது விவரங்களைப் பதிவு செய்யவும், மாதாந்திர மதிப்புக் கூட்டு வரி விவரங்களைத் தாக்கல் செய்திடவும், மென்பொருள் ஒன்றினைத் தயாரித்து இணையம் வாயிலாக வெளியிட தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தினை வணிக வரித்துறை கேட்டுக் கொண்டது. அதனடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மென்பொருள் ஒன்றினைத் தயாரித்து, அது சோதனை அடிப்படையில் வணிகவரித்துறையினால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**“http://tnvat.gov.in”** என்ற இணையதள முகவரியைப் பயன்படுத்தி வணிகர்கள் தங்களது மாதாந்திர மதிப்புக் கூட்டு வரி விவரங்களைத் தாக்கல் செய்திடவும் மற்றும் இணையம் மூலம் கட்டணம் செலுத்திடவும் முடியும்.

## 7) எரிசக்தித் துறை (Energy Department)

திருத்தியமைக்கப்பட்ட, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தினை **(Restructured Accelerated Power Development and Reforms Programme)** மத்திய



அரசு துவங்கியுள்ளது. தமிழ்நாடு மின் நிதிக் கழகம் இதற்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுகிறது.

தகவல் தொழில்நுட்பத்தினை முதுகெலும்பாகக் கொண்டு, மின் பகிர்மான நிலையில் தரவுகளைப் பெற்று, அதன் முடிவுகளின் அடிப்படையில் மின் பகிர்மானத்தை வலிமைப்படுத்திட இத்திட்டம் உதவுகிறது.

பெருநகரம், மாநகரம் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தாழ்வழுத்த மின் கட்டண வசூல் முறை முழுவதுமாக கணினிமயமாக்கப்பட்டு “பெஸ்ட்” எனும் திட்டத்தின் மூலம் **(Project BEST – Billing of Energy Services in TNEB)** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 8) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை (Environment & Forests Department)

### தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் இணைய வழி விண்ணப்ப ஒப்புதல் (Online Application for Consent for TNPCB)

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திற்கு இணைய வழியாக விண்ணப்பம் தாக்கல் செய்து ஒப்புதல் பெறுவதற்கான மென்பொருள் ஒன்றினை தேசியத் தகவல் மையம், சென்னை உருவாக்கியுள்ளது.

இம்மென்பொருள், நிறுவனங்கள் தங்களது விண்ணப்பங்களை எந்நேரத்திலும், எவ்விடத்திலிருந்தும் தாக்கல் செய்திட வகை செய்கிறது. மேலும், இம்மென்பொருளில் மாவட்ட அலுவலகங்கள் தங்களிடம் பெறப்பட்ட விண்ணப்பங்களின் ஒவ்வொரு நிலையையும் பின்நிலை இயக்கங்களின் மூலம் **(Back Office operations)** பதிவு செய்திடும் வசதி உள்ளது.

## 9) நிதித்துறை (Finance Department)

### மின்னணு ஓய்வூதிய முறை (e-Pension System )

ஓய்வூதியம் வழங்கும் அலுவலகத்திற்கென ''மின்னணு ஓய்வூதியம்'' என்ற மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இது உள்ளமைந்த இணையத்தில் பணிப்போக்கு வழி வடிவமைப்பினைக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள் ஓய்வூதிய விண்ணப்பத்தினைப் பெறுவதிலிருந்து மாநில கணக்காயர் அலுவலகத்தின் மூலம் ஓய்வூதியம் ஒப்பளிப்பு செய்வது வரையிலான அனைத்துக் கட்டங்களையும் கையாளுவதன் மூலம் ஓய்வூதியதாரர்களுக்கு பெரிதும் உதவி புரிகிறது.



### தானியங்கி கருவூலப் பட்டியல் ஏற்பு முறை (Automated Treasury Bill Passing System)

கருவூலக் கணக்குத் துறைக்கென ஒரு இணையவழி மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள், பணிகளை எளிதாக்குவதுடன், பட்டியல்களை சரிபார்த்து அன்றைய தினமே ஒப்புதல் வழங்கிட வகை செய்கிறது. இம்மென்பொருள் வழியாக அறிக்கைகளை உருவாக்குவதனால் தற்போதுள்ள புத்தக வடிவ கையேடு முறையினைத் தவிர்க்கலாம்.

## 10) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை (Health and Family Welfare Department)

### சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு (Health Management Information System - HMIS)

தமிழக அரசின் இரண்டாம் நிலை மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரிகள் ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் ஒரு மையப்படுத்தப்பட்ட வலை சார்ந்த பயன்பாட்டினை 60 கோடி ரூபாய் செலவில் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இதன்மூலம் தகவல் தொடர்புத் திறனைப் பயன்படுத்தி மாநிலம் முழுவதும் சுகாதாரம் குறித்த தரவுகளை சேகரித்து, சேமித்து, துல்லியமாக ஆராய்வதே இத்திட்டத்தின் பரந்த நோக்கமாகும்.

தமிழ்நாட்டின் அனைத்து சுகாதாரத் தலைமையகங்களுக்கும் துரிதமாகவும் சரியான நேரத்திலும் சுகாதார தரவுத் தொடர் மூலம், தரவுகளை வழங்குவதற்காக இத்திட்டம் கருத்தாக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 43 இரண்டாம் நிலை அரசு மருத்துவமனைகள் தமிழ்நாட்டின் பெரும்பரப்பு வலையமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மேலும், 2011–2012ஆம் ஆண்டில் 272 மருத்துவமனைகள் இதன்மூலம் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் நோயாளிகள் குறித்த மின் ஆவணங்கள் மற்றும் மேலாண்மைத் தகவல் அறிக்கை **(MIS)** ஆகியவை தயாரிக்கப் பயன்படுகிறது.

### பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் (Pregnancy and Infant – Cohort Monitoring & Evaluation System)

தமிழ்நாட்லுள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் பதிவு செய்துள்ள கர்ப்பிணி பெண்களின் உடல் நலத்தின் நிலையையும் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் உடல்நலத்தையும் இணையதளம் மூலம் கண்காணிக்கவும் ஒரு இணையதள கண்காணிப்பு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.



### 11) உயர்கல்வித் துறை (Higher Education Department)

சுமார் 450க்கும் மேற்பட்ட பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் 450 பொறியியல் கல்லூரிகள் பற்றிய அடிப்படைத் தகவல்களை வலை சார்ந்த பயன்பாடு மூலம் பொதுமக்கள் தெரிந்து கொள்ள ஏதுவாக ஒரு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் இயக்ககம் வழங்கியுள்ள தரவுகளைக் கொண்ட வலை சார்ந்த அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு நாட்டு மக்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இச்சேவை இணையதளம் மாணவர்கள், பொதுமக்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளின் இடைமுகமாக உள்ளது.

### 12) உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை (Home, Prohibition & Excise Department)

குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு, தேசிய மின் ஆளுமை திட்டத்தின் ஒரு குறிக்கோள் திட்டமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குற்றங்களை விசாரிப்பதற்கும், குற்றவாளிகளை விசாரிப்பதற்கும், குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கும் பரவலான மற்றும் ஒருங்கிணைந்த நாடு தழுவிய இணையதள உள்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது குற்றங்களைக் கண்டுபிடிக்கும் திறனை மேம்படுத்தும் தகவல் தொழில் நுட்பம் சார்ந்த ஒரு

கண்காணிப்பு அமைப்பாகும். இக்கட்டமைப்பு நாட்டின் அனைத்து காவல் நிலையங்களையும் உள்ளடக்கியுள்ளது.

## 13) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை (Housing and Urban Development Department)

நகர்ப்புற மற்றும் ஊரக வளர்ச்சி இயக்ககம், கட்டடம் கட்டுவதற்கான நில வரைபட ஒப்புதல் மற்றும் கட்டுமானத் திட்டம் ஆகியவற்றை தன்னியக்கம் மூலம் பயனாளிகளுக்கு வழங்குவதற்கு ஏதுவாக ஒரு மென்பொருள் உருவாக்கும் பணியினைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இம்மென்பொருள் குடிமக்கள் தொடர்பு மென்பொருள் ஆகும்.

## 14) நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை (Highways and Minor Ports Department)

போக்குவரத்து கணக்கெடுப்பு, மதிப்பீடு, அளவுகளின் எண்ணிக்கை, ஒப்பந்தப்புள்ளி, படிவங்கள் தயாரித்தல், ஒப்பந்தங்கள், அளவீடுகள், கட்டணங்கள் கணக்கிடுதல் மற்றும் தணிக்கை செய்தல் போன்றவற்றை கணினிமயமாக்கும் செயல்களில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை ஈடுபட்டு வருகிறது. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும்



சாலை விபத்து பற்றிய தரவு பராமரிப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு புவிசார் தகவல்களை பயன்படுத்தி வருகிறது.

## 15) தகவல் தொழில்நுட்பவியல் துறை (Information Technology Department)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தொழில் வளத் திட்டம் **(ERP)** என்ற மென்பொருளை லினக்ஸ் திறந்த இயங்குதளத்தில் பயனாக்கம் செய்துள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் செயல்பாடுகளை எந்த இடத்திலிருந்தும் எந்த நேரத்திலும் செய்யக்கூடிய அளவில் இம்மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருளின் பயனை தனிப்பயனாக்கத்திற்கு ஏதுவானதா என மதிப்பீடு செய்த பின்னர் அனைத்து அரசுத் துறைகளிலும் விரிவுபடுத்தப்படும்.

## மாநில சேவை இணையதளம் மற்றும் பொருளடக்க மேலாண்மை அமைப்பு (State Portal & Content Management System)

பொதுமக்களும் வணிக நிறுவனங்களும் அரசின் தகவல்கள் மற்றும் சேவைகளை ஒற்றை சாளர முறையில் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் அணுகி பெற்றுக் கொள்வதே இச் சேவை இணையதளத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சேவைதளம் மூலம் மாநிலம் முதல் மாவட்ட அல்லது

பஞ்சாயத்து நிர்வாகம் வரையுள்ள அனைத்து நிலைகளிலும் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை மாநில சேவை இணையதளம் மற்றும் தேசிய சேவை இணையதள பொருளடக்கக் கட்டமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் வலை தகவல்களை அணுகும் வழிக்காட்டுதல்களைப் பின்பற்றி இம்மாநில சேவை இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

## மாநில சேவை இணையதளம், மாநில சேவை நுழைவாயில் மற்றும் மின் படிவங்கள் (State Portal, SSDG and e-Forms)

அரசின் ஒருங்கிணைந்த சேவைகளை மக்களுக்கு வழங்கிடவும், தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கும், அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையே பாலமாக செயல்படுவதற்காக தமிழக அரசு, மாநில சேவை நுழைவாயிலை தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வழியாக செயல்படுத்துகிறது. இது, மாநில சேவை நுழைவாயில் மற்றும் மின் படிவங்கள் வாயிலாக அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையே தடையில்லாத் தொடர்பினை ஏற்படுத்திட உதவும். இத்திட்டம் 16.13 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்திட தயார் நிலையில் உள்ளது.



## 16) தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை (Labour and Employment Department)

வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்வதற்கும், தொழில் வழிகாட்டுதல், தரவுகளை தொடர்ந்து சேகரித்து தொகுத்தல் மற்றும் வேலைவாய்ப்பு திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற செயல்களை திறம்பட மக்களுக்கு வழங்குவதற்காக 24 மணி நேர வலைதள சேவை ஒன்று பிரத்தியேகமாக வேலைவாய்ப்பு இயக்ககத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்கள் தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு மூலம் மாநில தரவு மையத்துடன் இணைக்கப்பட்டு தற்போது வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் முழுவதும் இணையவழியாக்கப்பட்டுள்ளது.

## கட்டுமானத் தொழிலாளர் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்திற்கான வலைதள மென்பொருள் (Web-based Application Software for Construction and Manual Workers Welfare Board)

கட்டுமானத் தொழிலாளர் மற்றும் உடலுழைப்புத் தொழிலாளர் நலவாரியத்திற்கென வலைசார்ந்த மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் மூலம் பல நல உதவித் திட்டங்களும், ஓய்வூதியத் திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

## 17) சட்டமன்றப் பேரவைத் துறை (Legislative Assembly Department)

தமிழக சட்டமன்றப் பேரவையின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்–அஞ்சல் முகவரி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பொதுமக்கள் எந்த நேரத்திலும் தங்களுடைய பிரதிநிதிகளைத் தொடர்பு கொண்டு தங்களின் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். அனைத்து சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களும் தங்கள் மின் அஞ்சல் வசதியை இணையதளத்தின் மூலம் பயன்படுத்தி கொள்ளலாம்.

## 18) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (Municipal Administration and Water Supply Department)

சென்னை மாநகராட்சிக்கென விரிவான வலைதள மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு, அதன் மூலம் பலதரப்பட்ட செயல்களான நகராட்சி கணக்கியல், தொழில் மேலாண்மை, சொத்து வரி, சொத்து மேலாண்மை, பண்டக மற்றும் இருப்பு மேலாண்மை, நில மற்றும் தோட்ட மேலாண்மை போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.



## 19) திட்டம் , வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை (Planning, Development and Special Initiatives Department)

### சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்திற்கான தரவு மேலாண்மை மென்பொருள் (Data Management System for Chennai Metro Rail Project)

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் இம்மென்பொருள் உருவாக்கும் பொறுப்பை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. இம்மென்பொருள் பயன்பாடு, இத்திட்டத்தின் பங்கேற்பாளர்கள் அனைவரும் தங்களுக்கிடையே ஆவணங்களையும் தகவல்களையும் பரிமாறிக் கொள்வதற்கு உதவும். இம்மென்பொருள் ஆவணங்கள் சேகரித்தல், மீளப்பெறுதல், ஆலோசனை செய்தல், ஆய்வு செய்தல், தொடர்பு கொள்ளுதல் ஆகியவற்றை உறுதி செய்யும்.

### சென்னை புவிவரைபட பயன்பாடு (Chennai Utility Mapping)

இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் சேவை முகமைகளுக்கு பயன்படும் விதத்திலும், நகர நிர்வாகத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்திலும் நகர பரப்பிலான இடம்சார் தரவு கட்டமைப்பை உருவாக்குவதாகும். பலதரப்பட்ட அரசு நிறுவனங்கள் இத்தகவல்களை உபயோகித்து வருகின்றன.

## 20) பொதுப்பணித் துறை (Public Works Department)

### தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்திற்காக நிறுவன மேலாண்மை மென்பொருளை வடிவமைத்து, உருவாக்கி செயல்படுத்திட தகவல் தொழில் நுட்ப ஆலோசகர்களை பணியமர்த்துதல். (Hiring Services of IT consultants for Design, Development and Implementing Enterprise Information Management System for TNIAMWARM)

இத்திட்டம் நீர்வள நிலவளத்திட்டத்தின் கருவில் தோன்றிய பல்நோக்குத் திட்டமாகும். இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் பாசன விவசாயத்தின் செயல்திறனை மேம்படுத்துவதேயாகும். நிறுவன தகவல் மேலாண்மை அமைப்பினை இத்திட்டத்தில் பயன்படுத்துவது அவசியமாகிறது.

## 21) வருவாய்த்துறை (Revenue Department)

### வட்ட அலுவலகங்களில் கணினி வழி சேவைகள் (e-Services of Taluk offices)

- வட்ட அலுவலகங்களை இணைப்பதன் மூலம் வலைதள பயன்பாடுகளை நிறுவி பொதுமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவைகளை விரைந்து வழங்குதல்
- இணையவழி மூலம் சேவை வேண்டி விண்ணப்பித்தல்
- பொதுமக்களுக்கு ஒப்புகை அளித்தல்
- விண்ணப்பத்தின் நிலை அறியும் வசதி



பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் பின் வருமாறு :–

- பொதுமக்கள் சிட்டா குறித்த விவரங்களை அறிதல்
- ‘அ’ பதிவேடு குறித்து அறிதல்
- முகவர்கள் சிட்டா குறித்த விவரங்களை சரிபார்த்தல்
- முகவர்களுக்கான ‘அ’ பதிவேடு குறித்த விவரங்களை சரிபார்த்தல்
- அரசு நிலமா (அ) தனியார் நிலமா என சரிபார்த்தல்

நில பதிவுகள் தொடர்பான சேவைகள் :–

- சிட்டா விவரங்களைப் பார்த்தல் மற்றும் விண்ணப்பித்தல்
- ‘அ’ பதிவேடு விவரங்களைப் பார்த்தல் மற்றும் விண்ணப்பித்தல்
- பட்டா மாற்றம் வேண்டி விண்ணப்பித்தல்
- விண்ணப்பத்தின் நிலையறிதல்

### மாவட்ட வருவாய்த் துறை – சான்றிதழ்களை இணையதளம் வழியாகப் பெறுவதற்கு விண்ணப்பித்தல் (District Revenue Department – Online filing for Certificates)

பொதுமக்கள் இணையதளம் வழியாகச் சான்றிதழ்களையும், அலுவலக செயல்பாடுகள் குறித்த விவரங்களையும் பெற்றுக் கொள்ள விண்ணப்பிக்கலாம். எண்ணிலக்க முறையில்

வெளியிடப்பட்ட பின்வரும் சான்றிதழ்களை அரசு அலுவலகத்திற்குச் செல்லாமலேயே இணையதளம் வழியாக பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம்.

- குடும்பத்தில் பட்டதாரி இல்லை எனும் சான்றிதழ்
- கைவிடப்பட்ட பெண்கள் சான்றிதழ்
- வருமானச் சான்றிதழ்
- வகுப்புச் சான்றிதழ்
- இருப்பிடச் சான்றிதழ்

## கொலாப்லேண்ட் திட்டம் (CollabLand Project)

இம்மென்பொருளின் அடிப்படை நோக்கமானது –

- லேடர் அட்டவணையில் விவரங்களை பெறுதல்
- புலம் அளவீட்டுப் புத்தகத்தைப் பார்வையிடுதல் மற்றும் அச்சிடுதல்
- உட்பிரிவு மற்றும் இணைத்தல் போன்ற பரிமாற்றங்களைக் கையாளுதல்
- இடம்சார் மற்றும் இடம்சாரா தரவு தகவல்களை பொது மக்களுக்கு வழங்கும் வகையில் 'தமிழ்நிலம்' மென்பொருளோடு இடம் சாரா தகவல்களை ஒருங்கிணைத்தல்.



## எந்நேரமும்/ எங்கேயும் நில ஆவணம் (Anytime/ Anywhere Land Record)

இணையதளம் மூலம் கிராமப்புற நிலம் சார்ந்த விவரங்கள் அனைத்தையும் பொதுமக்கள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள வழிவகை செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

## மாவட்டங்களுக்கான இணையதளம் மூலம் மக்கள் குறைதீர்க்கும் மென்பொருள் (Online Grievance Redressal System for Districts)

பொதுமக்களின் குறைகளை தீர்ப்பதென்பது மாவட்ட நிர்வாகம் மற்றும் அனைத்து அரசுத் துறைகளின் செயல்பாடுகளில் முக்கியமான ஒன்றாகும். கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகம், சென்னை தேசிய தகவல் மையத்தின் உதவியுடன் இணையதளம் மூலம் மக்கள் குறைதீர்க்கும் மென்பொருள் ஒன்றினை உருவாக்கியுள்ளது. இம்மென்பொருள், பொதுமக்கள் தங்கள் குறைகளை மாவட்ட நிர்வாகத்திற்கு இணையதளம் வழியாகத் தெரிவிப்பதற்கான ஒரு வழியாகும். இது பின்புல செயல்பாட்டினைக் கையாள உதவுவதுடன், முக்கியமான அலுவலக நடைமுறைகளை கையாளவும், மாவட்ட நிர்வாகத்திற்கு பொது மக்கள் அனுப்பிய மனுக்களைத் திறம்படக் கண்காணிக்கவும் உதவுகிறது. திறந்தவெளி தொழில்நுட்பத்தில்

உருவாக்கப்பட்ட வலைசார்ந்த இம்மென்பொருள் 27 மாவட்டங்களில் பயன்பாட்டில் உள்ளது. 5.32 இலட்சத்திற்கும் மேற்பட்ட மனுக்கள் இதுவரை பெறப்பட்டுள்ளன.

### வலைசார்ந்த சான்றிதழ் மேலாண்மை மென்பொருள் (Web based Certificate Management System)

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களில் உள்ள பிறப்பு / இறப்பு பதிவேடுகளை இம்மென்பொருள் பராமரிக்கிறது. இம்மென்பொருள் மூலம் வகுப்புச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வாரிசுச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் போன்றவற்றின் விவரங்களை பதிவு செய்யவும் வழிவகுக்கிறது.

## 22) ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறை (Rural Development and Panchayat Raj Department)

### தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தினை கண்காணிக்கும் மென்பொருள் (NREGA Monitoring System)

தமிழ்நாட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தைத் திறம்பட செயல்படுத்திடவும், கண்காணிக்கவும் இம்மென்பொருள் வழிவகுக்கிறது.



இம்மென்பொருள் 385 வட்டங்களிலும் மற்றும் 31 மாவட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் கிராம அளவிலான விவரங்கள், வட்டார அளவில் பதிவு செய்யப்படுகிறது.

### இணைய வழி திட்டக் கண்காணிப்பு மென்பொருள் (Online Scheme Monitoring System)

இணையவழி திட்டக் கண்காணிப்பு மென்பொருள் ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களைக் கண்காணிக்க உதவுகிறது. ஒரு இலட்சத்திற்கும் அதிகமான திட்டங்கள் மாநிலம் முழுவதிலும் ஒவ்வொரு ஆண்டும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களுக்காக 9,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டு வருகிறது.

## 23) பள்ளிக்கல்வித்துறை (School Education Department)

### தமிழ்நாடு பள்ளிக்கல்வி வாரியத் தேர்வு முடிவுகள் (Tamil Nadu Board Results)

இந்த இணையதள மென்பொருளின் மூலம் தமிழ்நாட்டில் நடத்தப்படும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கானத் தேர்வுகள், துணைத் தேர்வுகள் மற்றும் சிறப்புத் துணைத்

தேர்வுகளுக்கான முடிவுகள் மற்றும் மதிப்பெண் விவரங்களைப் பெற இயலும். இந்த முடிவுகள் ஒரு வருடத்தில் 6 முறை வெளியிடப்படுகிறது.

## மின் சேவைப் பதிவேடு (e-Service Register)

பள்ளிக்கல்வி இயக்ககத்தைச் சேர்ந்த 1,03,712 ஆசிரியர்களின் பணி விவரங்கள் இலக்க முறையாக்கப்பட்டு வருகிறது. கடந்த காலாண்டில் 35,802 ஆசிரியர்கள் குறித்த தகவல்கள் இதில் பதியப்பட்டுள்ளது. தற்போது 1,00,080 ஆசிரியர்கள் குறித்த தகவல்கள் உள்ளன.

இப்பதிவேட்டில் 6,892 பள்ளிகள் மட்டுமின்றி, 32 தலைமைக் கல்வி அலுவலகங்கள் மற்றும் 68 மாவட்டக் கல்வி அலுவலகங்களுக்கு பயனர் குறியீடு அளிக்கப்பட்டு ஆசிரியரல்லாத அலுவலர் குறித்த தகவல்கள் பதியப்பட்டு வருகிறது. பொது விவரங்கள், பணி குறித்த விவரங்கள், குடும்ப விவரங்கள், வாரிசுதாரர் நியமனம், கல்வித் தகுதி விவரங்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பள்ளிக்கும் பயனர் குறியீடு அளிக்கப்பட்டுள்ளது.



## 24) சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை (Micro, Small and Medium Enterprises Department)

### தொழில் முனைவோர்களுக்கான குறிப்பாணை விண்ணப்பம் பகுதி–1 மற்றும் பகுதி 2–ஐ இணையதளம் வாயிலாக பதிவு செய்தல். (Online Filing of Entrepreneur Memorandum Form Part-I and Part-II)

மாவட்ட தொழில் மையங்களிலுள்ள அலுவலக பின்னணி செயலாக்கத்துடன் கூடிய இணைய வழி தொழில் முனைவோர் குறிப்பாணை பகுதி 1, 2 மற்றும் மூலதன மானியம் கோரும் விண்ணப்பங்களை தொழில் முனைவோர் சமர்ப்பிப்பதற்கு வழிவகை செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

## 25) சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்ட துறை (Social Welfare and Nutritious Meal Programme Department)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வாயிலாக முன்னோடி மின் மாவட்டத் திட்டத்தின்கீழ் மாவட்ட சமூகநல அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளதால் பயனாளிகள் இணையதளம் வாயிலாகப் பின்வரும் திட்டங்களின் கீழ் பயனடையலாம் :–

- ஏழைப் பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்
- விதவை மறுமண நிதியுதவித் திட்டம்
- ஏழை விதவை மகளுக்கான திருமண நிதியுதவித் திட்டம்

- ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம்
- கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்
- பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

பயனாளிகள் தங்களது விண்ணப்பத்தின் நிலையை அறிந்திட இவ்வெளிப்படையான அணுகுமுறை உதவுகிறது. இதன் வாயிலாக பல்வேறு திட்டங்களின்கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கையை அரசு கண்காணிக்க முடியும்.

### 26) தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை (Tamil Development, Religious Endowments & Information Department)

தமிழ் இணையக் கல்விக் கழக இணையதளத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட தமிழ் புத்தகங்கள் வெளியிடப்படும்.

### 27) சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை (Tourism and Culture Department)

இத்துறையின் பல்வேறு சேவைகள் கணினிமயமாக்கப்பட்டு, பின்வரும் சேவைகள் மக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

- இணையவழி முன்பதிவு முறை (Online Reservation System)



- தமிழக சுற்றுலாத் துறைக்கான இணையதளம் (Website for Tamil Nadu Tourism)
- உணவக மேலாண்மை மென்பொருள் (Hotel Management System)
- சுற்றுலா மேலாண்மை மென்பொருள்(Tours Management System)
- மையமாக்கப்பட்ட முன்பதிவு வசதி (Centralized Reservation System)
- படகு வீடு மேலாண்மை மென்பொருள் (Boat House Management System)

### 28) போக்குவரத்துத் துறை (Transport Department)

### போக்குவரத்துத் துறையின் மின் சேவைகள் (e-Services for Transport Department)

பொது மக்கள் நன்மைக்காக பின்வரும் இணையவழி சேவைகள் மின் சேவைகள் திட்டத்தின்கீழ் போக்குவரத்துத் துறையால் வழங்கப்படுகின்றன :–

- பயிற்சி ஓட்டுநர் விண்ணப்பங்களை இணையவழி மூலம் பதிவு செய்தல்

- வாகன விற்பனையாளர்கள் புதிய வாகனங்களுக்கான விண்ணப்பங்களை இணையவழி மூலம் பதிவு செய்தல்
- தவணை முறை விற்பனை ஒப்பந்தம் (படிவம் 34) மற்றும் தவணை முறை விற்பனையை முற்றுவித்தல் ஆகியவற்றை இணையவழியாகப் பதிவு செய்தல் (படிவம் 35)
- கனரக வாகனங்கள் ஓட்டுநர் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழை இணையவழியாகப் பதிவு செய்தல்
- ஓட்டுநர் உரிமம் தொடர்பான விவரங்களுக்காக, வட்டாரப் போக்குவரத்து அலுவலரை சந்திக்க நேரம் கேட்டு, இணையவழியாகப் பதிவு செய்தல்
- இணையவழி குறைகளை பதிவு செய்தல், அதன் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் நிலையை அறிதல்
- பயிற்சி ஓட்டுநர் உரிமம் கேட்டு விண்ணப்பிப்பவர்களுக்கான போக்குவரத்துக் குறியீடுகள், அடையாளங்கள் ஆகியவற்றை மென்பொருளின் மூலம் உணரும் திறனை ஆய்வு செய்வதற்காக புதிய திட்டத்தை உருவாக்குதல்.



### அரசு மின் கொள்முதல் மென்பொருள்

- தேசிய தகவல் மையம் **PKI** மூலம் செயல்படும் மின் கொள்முதல் மென்பொருளினை, அரசு அலுவலகங்களுக்குப் பின்வரும் நோக்கத்துடன் உருவாக்கி உள்ளது :–
- இணைய வழியில் அரசு அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் குறித்த விவரங்களைப் பதிவு செய்தல்
- ஒப்பந்தப் படிவங்கள் உருவாக்குதல் மற்றும் பதிப்பித்தல்
- திருத்தங்களைப் பதிப்பித்தல்
- ஒப்பந்தத்திற்கு முன் நடைபெற்ற கூட்டத்தின் ஆவணங்களை வெளியிடுதல்
- இணைய வழியாக ஒப்பந்த புள்ளிகளை தாக்கல் மற்றும் மறுதாக்கல் செய்தல்
- ஒப்பந்த புள்ளிகளின் இரு கூறுகளை உறுதிப்படுத்துதல்
- வங்கிகளின் இணையவழி பணம் செலுத்தும் வசதிகள் மூலம் கட்டணங்களை வசூலித்தல்

- பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளை எண்ணிலக்கக் குறியீட்டுக் கையொப்பம் மூலம் மறைமொழிக் குறியீடுகளாக மாற்றுதல்
- ஒன்று / இரண்டு / பல உறை முறையில் ஒப்பந்தப் புள்ளி கோரும் வசதி
- இணைய வழியாக ஒப்பந்த புள்ளிகளை திரும்பப் பெறுதல்
- இணைய வழியாக ஒப்பந்தப் புள்ளிகளைத் திறத்தல்
- நிதி ஒப்பந்தப் புள்ளிகளைத் தானியக்க முறையில் மதிப்பிடுதல்
- ஒப்பந்தப்புள்ளி குறித்த குழுவின் பரிந்துரைகளை ஒவ்வொரு கட்டத்திலும் பதிவு செய்தல்
- குறுஞ்செய்தி, மின்னஞ்சல் மூலம் பல்வேறு நிலைகளில் அரசு அலுவலர்களுக்கும், ஒப்பந்தப் புள்ளிதாரர்களுக்கும் தகவல் அளித்தல்
- இணைய வழி ஆவணங்களில் எண்ணிலக்கக் குறியீட்டுக் கையொப்பம் இடுதல்
- ஒப்பந்தத்தில், வெற்றி பெற்றவருக்கு ஒப்பந்தம் அளித்தல்



- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம், ஆசிய மேம்பாட்டு வங்கி மற்றும் உலக வங்கி அளித்துள்ள நெறிமுறைகளின்படி நடத்தல்.

**தகவல் தொழில்நுட்பவியல் துறை, நிதித் துறை மற்றும் இதர துறைகளுடன் இணைந்து இம்மின் கொள்முதல் மென்பொருளினைப் பயன்படுத்தும்.**

அத்தியாயம் **VII**

# மின் ஆளுமையின் முக்கியப் பகுதிகள் (Thrust areas in e-Governance)

## மேகக் கணினி பயன்பாடு (Cloud Computing)

கணினிப் பயன்பாட்டினை ஒரு சேவையாக நுகரும் விதத்தில் பங்கிடப்பட்ட வளங்களை உபயோகிக்கும் ஒரு புதிய அணுகுமுறையே மேகக் கணினி பயன்பாடு ஆகும். இச்சேவைகள் பரவலாக மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

- கட்டமைப்பு சேவை
- கணினி தள சேவை
- மென்பொருள் சேவை

மேகக் கணினி பயன்பாடு வாயிலாக, மின் சேவைகளை மேம்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை தகவல் தொழில்நுட்பவியல் துறை கண்டறிந்து வருகிறது.



## இணைய நெறிமுறை பதிப்பு–6 (Internet Protocol Version 6)

இணையதளத்தில் தகவல் பரிமாற்றமானது தரவுகளை சிறு தொகுப்புகளாக வலையமைப்புகளுக்கிடையே இணைய நெறிமுறை **(IP - Internet Protocol)** எனப்படும் பன்னாட்டு தொடர்பு நெறிமுறை வாயிலாக வழி நடத்துவதன் மூலம் நடைபெறுகிறது. அனைத்து தகவல் மற்றும் தொடர்பு சாதனங்களுக்கும் இணையம் வாயிலாக தொடர்பு கொள்ள ஒரு இணைய நெறிமுறை முகவரி தேவைப்படுகிறது. தற்போது இணைய நெறிமுறை பதிப்பு–4 **(IPv4)** உபயோகத்தில் உள்ளது.

தகவல் தொழில் நுட்பத்தின் விரைவான வளர்ச்சியினால், ஒதுக்கீடு செய்யப்படாத இணைய நெறிமுறை பதிப்பு–4 **(IPv4)–**ல் முகவரிகள் விரைவில் முடிந்து விடும் நிலை ஏற்பட்டு அதனால் இக்கட்டான விளைவுகள் ஏற்படக்கூடும். எனவே, **IPv4-**லிருந்து **IPv6-**க்கான மாற்றத்தை மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. அரசுத் துறைகள், தனியார் நிறுவனங்கள் மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்கான **IPv4** லிருந்து **IPv6** பயன்பாட்டு வரைபடம் என்ற கொள்கை ஆவணம் ஒன்றை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

## வணிக நுண்ணறிவு மென்பொருள் வாயிலாக தரவு கிடங்கு சேமிப்பு மற்றும் தரவு அகழ்வு (Data Warehousing, Data Mining using Business Intelligence Software)

திட்டம் மற்றும் வளர்ச்சியில், புள்ளியியல் தரவு முக்கிய பங்கு வகிக்கிறது. அரசின் புள்ளி விவரத்துறை மாவட்டங்கள் மற்றும் கிராமங்களிலிருந்து தினசரி / வாரம் / மாதம் / காலாண்டு / ஆண்டு வாரியாக தரவுகளை அவ்வப்போது சேகரித்து வருகிறது. இதன்மூலம் மிகப்பெரிய அளவில் தரவு சேமிக்கப்பட்டுள்ளது. மாதிரி கணக்கெடுப்பு மற்றும் மக்கள் கணக்கெடுப்பு வாயிலாகவும் அதிக அளவில் தரவு உருவாக்கப்படுகிறது.

அரசு தரவு கிடங்குத் திட்டத்தின் முக்கிய நோக்கம் வணிக நுண்ணறிவு மென்பொருள் சாதனங்களின் மூலம் அதிகாரபூர்வ புள்ளியியல் தரவுகளை ஆராய்வதாகும். இதன்மூலம் திட்ட வல்லுநர்கள், பொருளாதார வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் எங்கிருந்தும் பயன்பெறும் விதத்தில், பகுத்தறியப்பட்ட தகவல்களை இணைய வாயிலாக அளிக்க முடியும். இதனை கருத்திற்கொண்டு, தரவுக் கிடங்கு ஏற்படுத்துவதற்கான ஆணைகளை தமிழக அரசு வெளியிட்டுள்ளது. இதன் மூலம் அரசின் இணையதளம்



வாயிலாக பகுத்தறியப்பட்ட தரவு மற்றும் சாதனங்களை பயனாளிகள் தேர்ந்தெடுத்து ஆராய முடியும்.

இதனை முன்னிட்டு அரசு, தகவல் தொழில்நுட்பவியல் துறையின் வாயிலாக, வணிக நுண்ணறிவு மென்பொருள் எனப்படும் தரவு கிடங்கு மற்றும் தரவு அகழ்வு மேம்பட்ட சாதனங்களை உபயோகித்து ஒரு கட்டமைப்பை உருவாக்கவுள்ளது.

## செல்லிடபேசி ஆளுமை (Mobile Governance)

செல்லிடபேசிகள் பொது சேவைகளுக்கான அணுகுமுறைகளை விரிவாக்கம் செய்வதற்கான சாத்தியங்களைக் கொண்டுள்ளன. விரைவாகப் பெருகிவரும் செல்லிடபேசி சந்தாதாரர்களின் எண்ணிக்கையானது, அதிநவீன தகவல் தொடர்பு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி ஆளுமையை மேம்படுத்தவும் அனைத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியை தொடங்கவும் உதவும்.

தமிழ்நாட்டில் உள்ள அதிக அளவிலான செல்லிடபேசி ஊடுருவலின் அனுகூலங்களை பயன்படுத்தி சில சேவைகளை குடிமக்களுக்கு அளித்திடும் விதத்தில் திட்டம் ஒன்றை அரசு தொடங்க உள்ளது. செல்லிடபேசிகள் கிராமப்பகுதிகளுக்கு

உகந்த விதத்தில் அதிக அளவு முதலீடு இல்லாமல் கடைக் கோடி இடைவெளியை இணைப்பதன் மூலமாக எங்கேயும் எப்போதும் குடிமக்களுக்கான சேவைகளை அளிக்க உதவும். செல்லிடபேசி சேவை விநியோக தளங்கள் அரசு சேவைகள், நிதி சேர்மானம், சிறுகடன், இடம்சார் சேவைகள் ஆகியவற்றிற்கு மிகவும் உகந்ததாகும்.

செல்லிடபேசி கட்டணங்கள், அரசு சேவைகளுக்கான கட்டணங்கள், வங்கிக் கணக்கு செயல்பாடுகள், சிறுகடன், மின் ஆளுமை விண்ணப்பங்கள், சேவை விநியோகம், குறைதீர்ப்பு, பேரிடர் மேலாண்மை (எச்சரிக்கை மற்றும் பதில் நடவடிக்கை), இடம்சார் சேவைகள் (பயணம் / வழி தகவல், குற்றம் கண்டறிதல், பேரிடர்) முதலிய சேவைகள் இதில் அடங்கும்.

அரசு தேசிய மின் ஆளுமை பிரிவுடன் இணைந்து ஒரு செல்லிடபேசி அரசு கட்டண நுழைவாயிலை உருவாக்கும். அரசின் சேவை இணையதளம் செல்லிடபேசிக்கு இணக்கமான முறையில் இருக்கும்.

## ஒருங்கிணைந்த நிதிநிலை மேலாண்மை (Integrated Financial Management)

அரசின் செலவினங்கள் மற்றும் வருவாய்கள் பற்றிய சீரான உறுதிபடுத்தப்பட்ட தகவல்களை அளிக்கும் விதத்தில் ஒரு



மென்பொருள் கருவியை நிறுவ அரசு முயற்சி செய்யும். நிதித் துறை, கருவூலக் கணக்குத் துறை, ஓய்வூதிய இயக்குநரகம் மற்றும் மாநிலக் கணக்காயர் அலுவலகம், மாவட்டக் கருவூலம் மற்றும் சார்நிலைக் கருவூல அலுவலகங்களின் செயல்பாடுகள் இணையம் சார்ந்த சுழற்சி முறையில் இருக்கும்.

## புவிசார் தகவல் அமைப்பு (Geographical Information System)

புவிசார் தகவல் அமைப்பு என்பது, இடம் சார் மற்றும் இடம் சாராத தரவுகளை சீராக இணைத்து மேலாண்மை, பகுப்பாய்வு மற்றும் முடிவெடுத்தலுக்கு உதவும் கருவியாகும். தமிழ்நாடு அரசு புவிசார் தகவல் அமைப்பை திட்டம் மற்றும் கண்காணிப்பு செயல்பாடுகளுக்கு உதவும் வகையில் ஏற்று, அனைத்து மாவட்டங்களிலும் தரப்படுத்தப்பட்ட மாவட்ட / மாநில அளவிலான **GIS** பயன்பாடுகளை உருவாக்கி செயல்படுத்தும்.

தமிழ்நாடு அரசு புவிசார் தகவல் அமைப்புக்கான வன்பொருள் மற்றும் தரவு ஏற்ற தேவைகளுக்காக ரூ.**43.50** லட்சம் நிதி ஒப்புதல் அளித்துள்ளது. தேவையான இடம், தொழில்நுட்ப மனிதவளம் மற்றும் தொடர் செலவினம் ஆகியவை இதற்காக ஒதுக்கப்படும்.

அரசின் நோக்கங்களை உணரச் செய்யும் விதத்தில் தகவல் தொழில்நுட்பவியல் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையுடன் இணைந்து செயல்படும்.

புவிசார் தகவல் அமைப்பை பயனுள்ள வகையில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு பின்வரும் நடவடிக்கைகளை எடுக்கும்:–

- தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு–தமிழ்நாடு மாநில இடம்சார் தரவு கட்டமைப்பை தேசிய இடம்சார் தரவு கட்டமைப்பு வழியில் உருவாக்குதல்
- அதிக அளவிலான இடம்சார் தரவு தளத்தை உருவாக்கும் வகையில் போதுமான கட்டமைப்பை மாநில தரவு மையத்தில் பல்வேறு அளவுகளில் உருவாக்குதல்
- ஆரம்ப நிலை மென்பொருள் உருவாக்கம் மற்றும் தரவு தயாரிப்பு முதலியவற்றை உறுதி செய்யும் விதத்தில் போதுமான கட்டமைப்பை உருவாக்குதல்.



## சொத்து மேலாண்மை அமைப்பு (Asset Management System)

ஒரு நிறுவனத்தின் சொத்து விவரங்களின் தொகுப்பினை உருவாக்கி அதன் மேலாண்மையினை மேற்கொள்வதே சொத்து மேலாண்மையின் நோக்கமாகும். தகவல் தொழில்நுட்ப சொத்து மேலாண்மை என்பது இருப்பு மற்றும் நிதி தொடர்பான வழிமுறைகளின் தொகுப்பு ஆகும். தகவல் தொழில்நுட்பவியல் சூழலில், கொள்முதல், தயார்படுத்துதல், மேலாண்மை மற்றும் கழிவு செய்தல் முதலியவை சொத்து மேலாண்மையின் வாழ்க்கை சுழற்சியின் ஒரு பகுதியாகும்.

அனைத்து அரசுத் துறைகளுக்கும் பயன்படும் வகையில் ஒருமுறை செலவினத்தில் ஒரு பொதுவான சொத்து மேலாண்மை மென்பொருள் உருவாக்கப்படும்.

## வசதி மேலாண்மை சேவைகள் (Facility Management Services)

குடிமக்களுக்கு விரைவாக சேவைகளை அளிக்கும் வகையில் வன்பொருள், மென்பொருள், இணைப்பு ஆகிய தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு வசதிகளை அனைத்து துறைகளும் கொள்முதல் செய்து நிறுவி வருகின்றன. இச்சேவைகளை குடிமக்களுக்கு தொடர்ந்து அளிப்பதில் உள்ள மிகப்பெரிய

சவால் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பை பராமரிப்பதாகும். அனைத்து கட்டமைப்புகளும் குறிப்பிட்ட உத்தரவாதம், சேவை காலம் மற்றும் சுழற்சிக் காலத்தை கொண்டுள்ளன. போதுமான பராமரிப்பு இல்லாவிடில், இக்குறிப்பிட்ட காலத்திற்குப்பின் அனைத்து கட்டமைப்புகளும் மிகவும் பாதிக்கப்படும்.

பொதுமக்களுக்கான சேவைகளைத் தொடர்ச்சியாக அளிப்பதற்காக தகவல் கட்டமைப்பை கிடைக்கச் செய்தல் மற்றும் ஆதரவு சேவைகளை உறுதிப்படுத்தல் ஆகியவையே வசதி மேலாண்மை சேவைகளின் முக்கிய குறிக்கோள் ஆகும்.

அனைத்து அரசுத் துறைகளிலும் இந்த வசதி மேலாண்மை சேவை பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

## தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்தும் திட்டம் (NLRMP)

வருவாய், நில அளவை மற்றும் பதிவுத்துறைகள் ஆகியவை இணைந்து தேசிய நில ஆவணங்கள் நவீனப்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு, ஒரு கருத்துருவினை சமர்ப்பிக்கும். இதற்குத் தகவல் தொழில்நுட்பவியல் துறை உதவும்.



## அரசின் தொழில்நுட்ப மன்றம் (Technology Forum)

அரசின் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரிகளுக்கு அவர்கள் பணி தொடர்பான தொழில்நுட்பம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தொழில்நுட்ப மன்றம் ஒன்று உருவாக்கப்படும்.

அத்தியாயம் VIII

# மின்னணுப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் (Society for Electronic Transactions and Security - SETS)

தகவல் பாதுகாப்பு நுட்பங்களை உருவாக்கி அதன் மூலம் நாட்டின் தகவல் செல்வத்தை பாதுகாப்பதும் அத்தகைய கண்டுபிடிப்புகளால் தகவல் பாதுகாப்பு மின்னணு பொருட்களை உருவாக்கிப் பயன்படுத்துவதற்காகவும் மின்னணுப் பரிமாற்றம் மற்றும் பாதுகாப்புச் சங்கம் உருவாக்கப்பட்டது. மேலும், இது தனியார் மற்றும் பொதுத் துறையின் கூட்டமைப்பில் நாட்டின் தகவல் பாதுகாப்பிற்காக முதன் முதலாக உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பு இலாப நோக்கு இல்லாத ஒரு சங்கமாக 1860ஆம் ஆண்டைய இந்திய சங்கங்களின் சட்டத்தின் கீழ் 2002 மே திங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வமைப்பின் நிதி ஆதாரம் அரசு மற்றும் பொதுத் துறைகள், தனியார் நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களிலிருந்து ஒரு முறை மட்டுமே செலுத்தப்படும்



உறுப்பினர் கட்டணத்தின் மூலம் பெறப்படுகிறது. தமிழ்நாடு அரசு இதற்கு 60 இலட்சம் ரூபாய் நிதி வழங்கியுள்ளது.

## தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழிக்கான நவீன ஆய்வு மையம் (Advanced Facility for Information Security and Cryptology – AFISC)

தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழிக்கான நவீன வசதிகளுடன் கூடிய ஆய்வு மையத்தினை நிறுவ இந்திய அரசு 24.5 கோடி ரூபாய் வழங்கியுள்ளது. இவ்வமைப்பிற்கான கட்டடம் கட்டுவதற்கு, சென்னை தரமணியில் உள்ள எம்.ஜி.ஆர் அறிவுசார் நகரத்தில் 2.9 ஏக்கர் நிலத்தினை நீண்டகால குத்தகை அடிப்படையில் தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த ஆய்வு மையத்தின் நோக்கம், தகவல் பாதுகாப்பு மற்றும் மறைமொழியியலில் உலகின் தலை சிறந்த ஆய்வு மையமாக விளங்க வேண்டுமென்பதே ஆகும்.

இந்நிறுவனம் பாரத ரிசர்வ் வங்கியின் ஒரு அமைப்பான "பாரதீய ரிசர்வ் பேங்க் நோட் முட்ரான் பிரைவேட் லிமிடெட்" **(BRBNMPL – Bharatiya Reserve Bank Note Mudran Private Limited)** போன்ற நிறுவனங்களுக்கும், தமிழக அரசிற்கும் ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் பாதுகாப்புக்

கொள்கையினை உருவாக்குவதில் இந்நிறுவனம் பங்காற்றியுள்ளது.

தகவல் தொழில்நுட்பவியல் பாதுகாப்பு மற்றும் மின்னணுப் பாதுகாப்புக் கொள்கை ஆகியவற்றில் இந்நிறுவனத்தின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்திக்கொள்ள தமிழக அரசின் தகவல் தொழில்நுட்பவியல் துறை முடிவு செய்துள்ளது.



**அத்தியாயம் IX**

# தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலப் பூங்காக்கள் (Information Technology Special Economic Zone Parks)

2002ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையில், அறிவுசார்ந்த தொழில் நகரியத்திற்குத் **(Knowledge Industry Township)** தேவையான முதன்மைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த முதனிலை செயல்திட்டம் **(Blue Print)** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டது.

அறிவுசார்ந்த தொழில் நகரியம் சென்னையில் தகவல் தொழில்நுட்பவியல் நெடுஞ்சாலையில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் சேலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் முதலீட்டைப் பெருக்குவதற்கு சிந்திக்கப்பட்டது. அந்த தொலைநோக்குப் பார்வையின்

**(Vision)** அடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 8 இடங்களில் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முதனிலை செயல்திட்டத்தின்படி, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் பின்வரும் இடங்களில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலப் பூங்காக்களை உருவாக்கியுள்ளது :–

1. சென்னையில் சோழிங்கநல்லூர்
2. கோயம்புத்தூரில் விளாங்குறிச்சி
3. மதுரையில் இலந்தைக்குளம்
4. மதுரையில் வடபழஞ்சி–கிண்ணிமங்கலம்
5. திருச்சியில் நவல்பட்டு
6. திருநெல்வேலியில் கங்கைகொண்டான்
7. சேலத்தில் ஜாகீர் அம்மாபாளையம்
8. ஓசூரில் விஸ்வநாதபுரம்



## தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலப் பூங்காக்களின் நிலை :–

### சென்னை – சோழிங்கநல்லூர் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Chennai-Sholinganallur IT SEZ)

சோழிங்கநல்லூரில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைக்க தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு 377.08 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு உரிமை மாற்றம் செய்துள்ளது.

377.08 ஏக்கரில், 215 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் பல்வேறு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்திற்கு 80 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் எச்.சி.எல் மற்றும் மகிந்திரா சத்யம் ஆகிய நிறுவனங்களுக்கு தலா 50 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திருவாளர்கள் சதர்லேண்ட் நிறுவனத்திற்கு 15 ஏக்கர் நிலமும் மற்றும் திருவாளர்கள் சி.டி.எஸ். நிறுவனத்திற்கு 20 ஏக்கர் நிலமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 42 கோடி ரூபாய் முதலீடு

செய்துள்ளது. இப்பூங்காவில் திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் 18,000 பணியாளர்கள் பணிபுரிவதற்கு ஏதுவாக 23 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து அதில் 12,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

திருவாளர்கள் எச்.சி.எல். நிறுவனம் 10 இலட்சம் சதுரஅடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 4000 பணியாளர்களுடன் தங்களுடைய அலுவலகத்தை நடத்தி வருகிறது. திருவாளர்கள் மகிந்திரா சத்யம் 4.5 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தைக் கட்டத் தொடங்கி, அதில் 80 விழுக்காடு பணியினை இதுவரை பூர்த்தி செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் 91.22 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 92.36 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.



## கோயம்புத்தூர் – விளாங்குறிச்சி தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Coimbatore - Vilankurichi IT SEZ)

கோயம்புத்தூரில் விளாங்குறிச்சி கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அரசு 61.59 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்துள்ளது. இந்தத் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், திருவாளர்கள் விப்ரோ மற்றும் திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் ஆகிய இரு நிறுவனங்களுக்குத் தலா 9.5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 19 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் 16.40 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 26.19 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

## மதுரை – இலந்தைக்குளம் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Madurai - Ilandhaikulam IT SEZ)

மதுரையில் இலந்தைக்குளம் கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அரசால் 28.91 ஏக்கர் நிலம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுரஅடி பரப்புள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் மொத்தமாக 6.75 ஏக்கர் நிலம் இரண்டு நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் ஹனிவெல் டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 4.50 ஏக்கர் நிலம் மற்றும் திருவாளர்கள் செல்லா சாஃப்ட்வேர் நிறுவனத்திற்கு 2.25 ஏக்கர் நிலம்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காகத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 7 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிருவாகக்



கட்டடத்திற்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 18 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் எச்.சி.எல். டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலம் அரசு குத்தகை அடிப்படையில் ஒதுக்கியது. ஆனால் இந்நிறுவனம் இப்பூங்காவில் தங்களது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில், தான் செலுத்திய பணத்தை திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும், மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 8.16 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 14 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

## மதுரை – வடபழஞ்சி மற்றும் கிண்ணிமங்கலம் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Madurai - Vadapalanji - Kinnimangalam IT SEZ)

மதுரையில், வடபழஞ்சி கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தமிழக

அரசால் 245.17 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் முடிவடைந்துள்ளன.

மதுரை – வடபழஞ்சி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், மொத்தமாக 7 ஏக்கர் நிலம் இரண்டு நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் காலிஃபர் பாயின்ட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும் திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம் (இந்தியா) நிறுவனத்திற்கு 2 ஏக்கர் நிலமும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 15 கோடி ரூபாயையும், சாலை மேற்புற பாலம் கட்டுவதற்காக 12 கோடி ரூபாயையும் முதலீடு செய்துள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், திருவாளர்கள் எச்.சி.எல். டெக்னாலஜிஸ் நிறுவனத்திற்கு 60 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் சத்தியம் லிமிடெட் நிறுவனத்திற்கு 50 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் சின்டெல் நிறுவனத்திற்கு 25 ஏக்கர் நிலமும் மற்றும் சதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் லிமிடெட்



நிறுவனத்திற்கு 5 ஏக்கர் நிலமும் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட நிறுவனங்கள் இப்பூங்காவில் தங்களது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில், தாங்கள் செலுத்திய பணத்தை திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளனர்.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 57.02 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 181.15 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

### திருச்சி – நவல்பட்டு தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Trichy - Navalpattu IT SEZ)

திருச்சியில் நவல்பட்டு கிராமத்தில் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு 147.61 ஏக்கர் நிலத்தை உரிமை மாற்றம் செய்துள்ளது. இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள்

மற்றும் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிருவாக கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 26 ஏக்கர் நிலம், ஏழு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் அசிஸ்ட் இன்டர்நேஷனல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 3 ஏக்கர், திருவாளர்கள் ஹெல்த் பிளான் சிஸ்டம்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 2 ஏக்கர், திருவாளர்கள் ஐ–வேவ் சிஸ்டம்ஸ் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர், திருவாளர்கள் அன்லிமிடெட் இன்னொவேஷன்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர், திருவாளர்கள் ஜைலாக் சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 5 ஏக்கர், திருவாளர்கள் ஐ.லிங்க் நிறுவனத்திற்கு 1 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் டபிள்யூ எம்.எஸ் நிறுவனத்திற்கு 5 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் எச்.சி.எல். இன்போ நிறுவனத்திற்கு 2 ஏக்கர் நிலமும், திருவாளர்கள் சதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் லிமிடெட்



நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலமும், அரசு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்தது. ஆனால் மேற்கண்ட நிறுவனங்கள் இப்பூங்காவில் தங்களது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில் தாங்கள் செலுத்திய பணத்தை திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளனர்.

இத்தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காகத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 14.23 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடத்திற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 18 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 40.88 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 80.73 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

## திருநெல்வேலி – கங்கைகொண்டான் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Tirunelveli - Gangaikondan IT SEZ)

திருநெல்வேலியில் கங்கைகொண்டான் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தகவல் தொழில்நுட்பவியல் பூங்கா அமைக்க, சிப்காட் நிறுவனம் 500 ஏக்கர் நிலத்தினை குத்தகை அடிப்படையில் நில மாற்றம் செய்துள்ளது. அவற்றில், 290 ஏக்கர் நிலம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பூங்காவில் முதற்கட்டமாக 100 ஏக்கர் பரப்பளவிற்கு தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 102 ஏக்கர் நிலம், இரண்டு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் சின்டெல் இன்டர்நேஷனல் லிமிடெட் நிறுனத்திற்கு 100 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் டெக்கான் சர்வீஸஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 2 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு



செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதியில் திருவாளர்கள் ஏ மற்றும் டி காஸ்மிக் பவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கு 25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, கங்கைகொண்டான் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திருவாளர்கள் சதர்லேண்ட் குளோபல் சர்வீஸஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 10 ஏக்கர் நிலம் அரசு குத்தகை அடிப்படையில் முதலில் ஒதுக்கியது. ஆனால் இந்நிறுவனம் இப்பூங்காவில் தனது நிறுவனத்தை துவக்க விருப்பமில்லாத நிலையில், தான் செலுத்திய பணத்தை திருப்பித் தருமாறு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் கேட்டுள்ளது.

இத்தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீடு மற்றும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 12.76 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் நிருவாகக் கட்டடத்திற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் ரூ.13.92 கோடியை முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு

வசதிகளுக்காகவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 142 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 231 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

## சேலம் – ஜாகீர் அம்மாபாளையம் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Salem - Jagir Ammapalayam IT SEZ)

சேலம் மாவட்டம் ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்காக தமிழ்நாடு அரசால் 164.26 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

இத்தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 53.33 ஏக்கர் பரப்பளவிற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 8.50 ஏக்கர் நிலம் மூன்று தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் டி.பி. புரொபஷனல்ஸ் – 3 ஏக்கர், திருவாளர்கள் மகிமா



டெக்னாலாஜிஸ் பி. லிட் – 3 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் ஜி.டி.பி. இன்போடெக் சொலுயூஷன்ஸ் லிமிடெட் – 2.5 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காகத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 9.43 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 16.45 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 28.38 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

## ஓசூர்–விஸ்வநாதபுரம் தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Hosur - Viswanathapuram IT SEZ)

ஓசூர்–விஸ்வநாதபுரம் கிராமத்தில் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு, தமிழக அரசால் 174.47 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

இத்தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தத் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 27 ஏக்கர் நிலம் ஆறு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு (திருவாளர்கள் ஒகியா இன்ஃபோகாம் பி. லிட். – 10 ஏக்கர், திருவாளர்கள் தேஜாஸ் நெட்வொர்க் லிட் – 5 ஏக்கர், திருவாளர்கள் சி.ஆர்.எம்.ஐ.டி. சொல்யூஷன்ஸ் பி. லிட். – 3 ஏக்கர், திருவாளர்கள் சி.ஆர்.எம். இன்ஃபோடெக் இந்தியா பி. லிட். – 2 ஏக்கர், திருவாளர்கள் அசென்ட் சர்க்யூட்ஸ் பி. லிட். – 5 ஏக்கர் மற்றும் திருவாளர்கள் நௌஸ் இன்ஃபோ சிஸ்டம்ஸ் பி. லிட். – 2 ஏக்கர்) குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், அடிப்படைக் கட்டமைப்பு பணிகளுக்காக, தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 24.27 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது.

இத்தகவல் தொழில்நுட்பவியல் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்காகவும் மற்ற கட்டமைப்பு வசதிகளுக்காவும் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் கட்டடத்திற்காகவும் 66.22 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பூங்காவில் தற்சமயம் 81.25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ளது.

## வேலூர் மற்றும் விழுப்புரம் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்

வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கண்டறியுமாறு சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் அமைந்துள்ள தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில், ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள நிலத்தை தகவல்

தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் முதலீட்டை ஈர்த்திடும் வண்ணம் அந்நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்திட 2011–2012ல் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களில் இருக்கின்ற மந்த நிலையை போக்கி, சீரழிந்த நிலையை போக்கி பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு ஏதுவாக, இத்தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்களின் தரத்தினை மேம்படுத்தி, அந்நிறுவனங்களின் முதலீடுகளை கவரும் வகையில் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டினை உகந்த மாநிலமாக மாற்றுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்படி அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்பேரில், தமிழகத்தின் மற்ற மாவட்டங்களிலும் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும்**



**உள்நாட்டு நிறுவனங்களை உள்ளடக்கிய தகவல் தொழில்நுட்பவியல் பூங்காக்கள் தொடங்க ஏதுவான சூழ்நிலையை உருவாக்கிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

## தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் உதவி மையம் (TN IT Help Desk)

தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் பிரிவுகளை தொழில் முனைவோர் நிறுவிட உதவுவதற்காக வலைசார்ந்த உதவி மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்தியாயம் X

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICT Academy)

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் தனியார் தொழில் துறையின் பிரதிநிதியாகத் திகழும் சி.ஐ.ஐ. **(CII)–**ன் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் ஒரு சுயாட்சி உரிமையுள்ள, இலாபத்தைக் கருதிச் செயற்படாத ஒரு சங்கமாகும். அது சிறப்பு வாய்ந்த தகவல் தொழில்நுட்பவியல் துறையைச் சேர்ந்த முன்னோடிகள் மற்றும் தமிழ்நாடு அரசு அதிகாரிகளால் நிருவகிக்கப்படுகிறது.

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நோக்கம், தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் சார்ந்த செயற்களத்திலுள்ள உயர் கல்வி ஆசிரியர்களுக்குப் பயிற்சி



அளிப்பதும் அதன்மூலம் அவர்களுடைய மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கும் மற்றும் பணியில் அமர்த்தப்படக்கூடிய அளவுகளுக்கான தகுதியைப் பெற்றுப் பயனடைவதற்குமேயாகும்.

முதல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை அமைவிடங்களிலுள்ள மாணவர்களுக்கு ஒரே சமமான வாய்ப்புகளை வழங்குவதற்கான வாழ்க்கைச் சூழலை உருவாக்குவதில் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் நிறுவனம் தன் கவனத்தை ஒருமுகப்படுத்துகிறது. இதன் மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிந்தனைக்கேற்ற வகையில் திறமை வாய்ந்த ஒரு புதிய தலைமுறையை உருவாக்கி தமிழகத்தில் தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பவியல் துறை ஆதாயம் அடையச் செய்கிறது.

அத்தியாயம் XI

# தமிழ் இணையக் கல்விக்கழகம் (Tamil Virtual Academy)

## தொடக்கம்

உலகு தழுவி வாழும் தமிழர்கள் மற்றும் தமிழ் கற்க விரும்புவோர் தமிழ் மொழியைக் கற்கவும் தமிழர் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை அறிந்து கொள்ளவும் வாய்ப்பளிக்கும் வகையில், இணைய வழிக் கல்வி வழங்குவதற்காக தமிழ் இணையக் கல்விக்கழகம் நிறுவப்பட்டது.

## கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது மழலையர்க் கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது.

87 நாடுகளைச் சேர்ந்த 9773 மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 1280 மாணவர்கள் சான்றிதழ் படிப்பிலும், 19 மாணவர்கள் மேற்சான்றிதழ்ப் படிப்பிலும், 235 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 90 மாணவர்கள் மேற்பட்டயத் தேர்விலும் மற்றும் 77 மாணவர்கள் பட்டத் தேர்விலும் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர்.



பட்டயம் / மேற்பட்டயம் / பட்டப் பாடங்கள் அனைத்தும் முழுமை பெற்றுத் தளத்தில் இடப்பட்டுள்ளன.

## ஒருங்கிணைப்பு மையங்கள்

தமிழர்கள் பயனடையும் வகையில் இந்தியா, அமெரிக்கா, கனடா, மலேசியா, இலங்கை, மொரீசியஸ், சுவிட்சர்லாந்து, செர்மனி, ரியூனியன், ஆஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், பிரான்சு, மியான்மர், தென்னாப்பிரிக்கா, நியூசிலாந்து, பிஜி தீவுகள் ஆகிய 16 நாடுகளில் 46 ஒருங்கிணைப்பு மையங்கள் மூலம் தமிழ்க் கல்வி கற்பிக்கப்படுகிறது. மேலும், கல்வி தொடர்பு மையங்களை உலகம் முழுவதும் தமிழர்கள் அதிகம் வசிக்கும் நாடுகளில் நிறுவவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மின் நூலகம்

தமிழ் இணையக் கல்விக்கழக மின் நூலகத்தில் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள், அகராதிகள், தமிழ் தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கலைக்களஞ்சியம், பண்பாட்டுக்காட்சியகம், சுவடிக்காட்சியகம் (ஓலை) ஆகியவை மாணவர்கள் மற்றும் பார்வையாளர்கள் உபயோகத்திற்காகத் தளத்தில் இடப்பெற்றுள்ளளன.

## குறுந்தகடு வெளியீடு

பாட நூல்களைக் குறுந்தகடாக வெளியிடும் திட்டத்தின் கீழ், மழலையர், சான்றிதழ், இடைநிலை, மற்றும் மேல் நிலை, தமிழ்ப் பயிற்சி, தமிழ்க் கற்போம் ஆகிய குறுந்தகடுகள் உருவாக்கப்பட்டு மாணவர்களின் நலனுக்காக வெளியிடப்பட்டுள்ளன.

## சுவடிக் காட்சியகம்

உ.வே.சாமிநாத ஐயர் சேகரித்த பழந்தமிழ் நூல்களின் சுவடிகளை தேடும் வசதியுடன் மின்நூலகத்திலிடும் பணி நிறைவுற்றுள்ளது. இதுவரை 6000 ஓலைகள் தட்டச்சு வடிவில் உரையுடன் தரப்பட்டுள்ளன.

## பண்பாட்டுக் காட்சியகம்

நாட்டுப்புற கலைகள், கோவில்கள், திருவிழாக்கள், நினைவுச் சின்னங்கள், விளையாட்டுகள் பற்றிய ஒளி–ஒலிப் படத்துண்டுகள் பண்பாட்டுக் காட்சியகத்தில் இடம் பெற்றுள்ளன.

## தமிழ்க் கலைக்களஞ்சியம்

தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள 10 தொகுதிகளைக் கொண்ட தமிழ்க் கலைக்களஞ்சியம்



தலைப்புச்சொல் தேடும் வசதியுடன் தமிழ் இணையக் கல்விக் கழக இணையதளத்தில் இடப்பட்டுள்ளது. மேலும் தமிழ் வளர்ச்சிக் கழகம் வெளியிட்டுள்ள குழந்தைகள் கலைக்களஞ்சியத்தை இணையதளத்திலிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

## இணைய வகுப்பறை

தமிழை கற்பிக்க தேவையான பாடங்களும், இளங்கலை தமிழியல் பட்டக் கல்விக்கான ஒளிவழிப் பாடங்களும் இணையத் தளத்தில் இடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் **YouTube –**லும் இடப்பட்டுள்ளன.

## தமிழ் மென்பொருள் வளர்ச்சி நிதி

ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், கையெழுத்துப் பிரதியிலிருந்து ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், மின் அகராதி, தமிழ் சொற்களஞ்சியம் போன்ற பல தமிழ் மென்பொருள்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் பல மென்பொருள்களை உருவாக்கும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## TAM/TAB-லிருந்து ஒருங்குறியில் மாற்றம்

தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் அனைத்துப் பாடங்களும் **TAM / TAB** - எழுத்துருவிலிருந்து ஒருங்குறியில் மாற்றப்பட்டுள்ளது. மின் நூலகப் புத்தகங்களும் ஒருங்குறியில் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது.

## செந்தர எழுத்துருக்கள்

ஒருங்குறி **(Unicode)** மற்றும் அனைத்து எழுத்துரு **(TACE)** முறைகள் தமிழ்நாடு அரசின் செந்தரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அதற்கேற்ப, எழுத்துருக்களையும், விசைப்பலகை இடைமுகங்களையும் உருவாக்கி இலவசமாக அளிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## கலைச்சொல் பேரகராதிகள் வெளியீடு

பல்வேறு பல்கலைக்கழகங்கள் தொகுத்து அளித்துள்ள ஏறத்தாழ 2,50,000 கலைச்சொற்கள் துறைவாரியாகப் பகுக்கப்பட்டு 14 தொகுதிகளாய் வெளியிடப்பட்டுள்ளன.

2,30,000 கலைச்சொற்கள் அனைத்தும் தமிழ் இணையக் கல்விக்கழகம் மற்றும் விக்கிபீடியாவின் தளத்தில்



சேர்க்கப்பட்டுள்ளது. அவை குறுந்தகடு வடிவிலும் வெளியிடப்படும்.

## தமிழ் இணையக் கல்விக்கழக கட்டடம்

தமிழ் இணையக் கல்விக்கழகக் கட்டடத்தின் தரைத்தளம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு, அங்கு தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது இயங்கி வருகிறது. முதல் தளமும், படத்தளம் மற்றும் காட்சி அரங்கமும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

அத்தியாயம் **XII**

## அரசு கேபிள் டிவி நிறுவனம்
## (Arasu Cable Television Corporation)

உயர்தரத்திலான கம்பிவட சேவைகளை நியாயமான கட்டணத்தில் உள்ளூர் கம்பிவட இயக்குபவர்கள் வழியாக பொது மக்களுக்கு வழங்கிட அரசு கேபிள் டிவி நிறுவனம் நிறுவப்பட்டது.

தஞ்சாவூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் நான்கு இலக்கமுறைத் தலைமுனைகளும் **(Digital head ends)** விழுப்புரம் மாவட்டம், முண்டியம்பாக்கம் கிராமத்தில் ஒரு தொடர்முறைத் தலைமுனையும் **(Analog head end)** நிறுவப்பட்டது. பின்னர், இந்நிறுவனம் செயல்படாமல் முழுமையாக முடங்கியது.

இந்நிலையில், அரசு கேபிள் டிவி நிறுவனத்தை உடனடியாக மறுசீரமைத்து கம்பிவடத் தொலைக்காட்சி சேவையை நியாயமான கட்டணத்தில் பொதுமக்களுக்கு வழங்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வரலாற்று சிறப்பு மிக்க ஆணைக்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்திட்ட



வழிகாட்டுதலைக் கொண்டு இந்நிறுவனத்தின் நடவடிக்கைகளை மறுசீரமைப்பதற்கான அனைத்து தீவிர முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது. இந்நிறுவனத்தை மறுசீரமைத்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு இந்நிறுவனத்திற்கு தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ஆகியோரை அரசு நியமனம் செய்துள்ளது. மேற்குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டி இந்நிறுவனத்திற்கு வழிவகை முன்பணமாக 3 கோடி ரூபாய் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களை (சென்னை நீங்கலாக) சேர்ப்பதற்காகச் செய்தித் தாள்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் சேருவதற்கு உள்ளூர் கேபிள் டிவி இயக்குபவர்கள் பேரளவில் ஆர்வம் காட்டியுள்ளனர். இந்நிறுவனத்தில் பதிவு செய்துக் கொள்ள வரையறுக்கப்பட்ட கடைசி நாளான 09.08.2011 வரை 35,030 உள்ளூர் கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களும் **(LCOs)**, 2,640 பன்முக ஏற்பாட்டுத்துறை இயக்குபவர்களும் **(MSOs)** ஆக மொத்தம் 37,670 இயக்குபவர்கள் இந்நிறுவனத்தில் பதிவு செய்துள்ளனர். தமிழ்நாட்டில், மொத்தம் உள்ள 40,000 கம்பிவடத் தொலைக்காட்சி இயக்குபவர்களுள்

94 சதவீதம் இயக்குபவர்கள் அரசு கேபிள் டிவி நிறுவனத்தில் சேர்வதற்காக விண்ணப்பித்துள்ளனர்.

தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இலக்கமுறைத் தலைமுனைகள் மறுசீரமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், 16 மாவட்டங்களில் புதிய தொடர்முறைத் தலைமுனைகள் நிறுவப்பட்டு வருகின்றன. 11 மாவட்டங்களில் தற்போதுள்ள தனியார் இயக்குபவர்களின் **(Private Operators)** கட்டுப்பாட்டு அறைகளை இந்நிறுவனம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து கம்பிவடத் தொலைக்காட்சி சேவைகளை வழங்க உத்தேசித்துள்ளது.

தங்களுக்கென தனியாக கட்டுப்பாட்டு அறைகளைக் கொண்டுள்ள பல பன்முக ஏற்பாட்டுத்துறை இயக்குபவர்களும் தங்களுடைய கட்டுப்பட்டு அறைகளை அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்குத் தர விருப்பம் தெரிவித்துள்ளனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மிக விரைவில் அரசு கேபிள் டிவி சேவையினை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



அத்தியாயம் **XIII**

# 2011–2012ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

## தகவல் தொழில்நுட்பத்துறையை நவீனமயமாக்குதல் (Modernisation of Information Technology Department)

தகவல் தொழில்நுட்பத்துறையினை நவீனமயமாக்குதலின் முதற்படியாக, துறையினை முழுமையாக மறு கட்டமைத்து, நவீன பணிச் சூழலை ஏற்படுத்துவதற்காக 2011–2012ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் 23 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது. இது மற்ற துறைகளுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழும்.

## தலைமைச் செயலகத்திற்கான தொழில் வளத்திட்ட (ERP - Enterprise Resource Planning) மென்பொருள்

காகிதப் பயன்பாடற்ற அலுவலகமாக தலைமைச் செயலக தகவல் தொழில்நுட்பத்துறையினை உருவாக்கிடும் பொருட்டு, தொழில் வளத்திட்ட மென்பொருள் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. இம்மென்பொருளின் பயன்பாட்டுத்திறன் மற்றும் பயனாக்கத்தைப் பொறுத்து இது தலைமைச் செயலகத்தின் மற்ற துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இதற்கென 2011–2012ஆம்

ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் 14.80 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

### மாநில சேவை விநியோக நுழைவாயில் (State Service Delivery Gateway)

மாநில சேவை விநியோக நுழைவாயில் பல்வேறு துறைகளின் சேவைகளை வழங்கும். தேசிய தகவல் மையத்தினால் ஆதார / திறந்த நிலை மென்பொருள் மூலம் உருவாக்கப்பட்ட மின் மாவட்டத் திட்ட மென்பொருள் இதற்கென ஒதுக்கப்பட்ட நிதியின் மூலமே கையாளப்படும். மூன்றாம் நபர் விற்பனையாளர்கள் மூலம் தயாரிக்கப்பட்ட மரபு வழி மென்பொருட்களை இதன் மூலம் கையாளும் வகையில் அவற்றை உருமாற்றம் செய்திடவும், தரவுகளை புலம்பெயர்த்திடவும், எழுத்துருக்களை மாற்றிடவும், தொழில்சார் உதவிக்கும் நிதி தேவைப்படுவதால், 2011–2012 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் 10.20 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

### தமிழ் இலக்கியத்திற்கான உரைவிளக்கத் தொகுப்பு (Annotated Corpus for Tamil Literature)

தமிழ் இணையக் கல்விக்கழகம் தமிழிலக்கியங்களைச் செழுமையாகக் கொண்டுள்ளது. மொழியியல் சார்ந்த தமிழ் உரைவிளக்கத் தொகுப்பினை உருவாக்குவதற்கென



2011–2012 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் 25 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

### பேச்சுத் தரவுதளம் (Speech Database)

தமிழ் இணையக் கல்விக்கழகம் மாணவர்களுக்கென மெய்நிகர் கற்பித்தலை வழங்கத் தொடங்கியுள்ளது. அதற்காக மொழி மற்றும் இலக்கியப் படிப்புகளுக்கான பேச்சுத் தரவுதளங்கள் உருவாக்கப்படும். தமிழ் மொழி மற்றும் இலக்கியங்களைக் கற்பிப்பதற்காக பொதுவான ஒரு பேச்சுத் தரவுதளத்தினை தமிழ் இணையக் கல்விக்கழகம் உருவாக்கி வருகிறது. இதற்கென 2011–2012 ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் 10 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

### அரங்க உபகரணங்கள் (Auditorium Equipments)

தமிழ் இணையக் கல்விக்கழகம் சொந்தக் கட்டடத்தில் அரங்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கத்திற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திட 2011–2012ஆம் ஆண்டிற்கான பகுதி–2 திட்டத்தின் கீழ் 17 இலட்சம் ரூபாய் கோரப்பட்டுள்ளது.

**ஆர்.பி. உதயகுமார்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**